பக்கங்கள்:21 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை 05.06.2022 கதிர் 212

### இது ரகசியம் அல்ல!

21 ஆவது அரசமைப்புத் திருத்த விவகாரம்தான் இப்போது கொழும்பு அரசியலில் பேசுபொருள்.

பிரதான எதிர்க்கட்சிகளுடன் நேற்று முன்தினம் இது குறித்துப் பேச்சு நடத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ☞2

# வரி அதிகரிப்புகளினால் விரைவில் பட்டினிச் சாவு!

## பொருளாதார நிபுணர்கள் அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 05

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ள இந்தத் தருணத்தில், வரி விகிதங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனால் விரைவில் பட்டினிச் சாவு நேரும் எனப் பொருளாதார நிபுணர் ஒருவரை மேற்கோள்காட்டி தமிழ் சமூக ஊடகம் ஒன்று விரிவான தகவல் வெளியிட்டுள்ளது. ☞2

## ஒரு இலட்சத்து 6 ஆயிரம் பேருக்கு யாழில் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு

### அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள 78 ஆயிரத்து 442 சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசாங்கத்தின் தலா 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை வங்கிகளில் வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சமுர்த்தி பயனாளிகளுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் அதே நேரம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 27 ஆயிரத்து 978 பேருக்கும் அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் ☞20

## நேற்று வவுனியா ஏ9 வீதி விபத்தில் இளைஞன் பலி; ஒருவர் படுகாயம்!



வவுனியா, ஏ9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்தநிலையில் வவுனியா ☞20

## பாடசாலைகளை வாரத்தில் ஐந்து நாள்களுமே நடத்துவது பெரும் நெருக்கடியான விடயமாம்!

### விசனிக்கிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 05

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை ஒட்டுமொத்தமாக வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியாத நிலைமையாக உள்ளது. இந்நிலையில் பாடசாலைகளை வாரத்தில் ஐந்து நாள்களும் நடாத்துவதென்பது பெரும் ☞20

## தியாகி சிவகுமாரனின் நினைவேந்தல் இன்று



தியாகி பொன். சிவகுமாரனின் 48 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பிரதேச சபையின் அவைத் தீர்மானத்தின் பிரகாரம், பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ☞20

## லாஃப்ஸ் இவ்வாரம் சந்தைக்கு! விலை ரூ.6,000 இலும் அதிகம்




லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களை இந்த வாரமளவில் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என எதிர்ப்பார்ப்பதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. அதேபோல், லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரிக்கக்கூடும் எனவும் அந்நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ☞2

## ரஷ்ய - இலங்கை ராஜதந்திர நெருக்கடி விமானத்தைத் தடுத்த நடவடிக்கையால்?

ரஷ்யாவின் ஏரோஃப்ளோட்சேவையின் எயர்பஸ் ஏ330ஜெட் விமானம் ஒன்றைத் தடுத்து வைக்கும் உத்தரவை கொழும்பு நீதிமன்றம் ஒன்று விடுத்தமையை அடுத்து, அந்த விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் ரஷ்யா, இலங்கை இடையே ராஜதந்திர நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ஒட்டி மொஸ்கோவிற்கான இலங்கைத் தூதுவர் ஜனித்த அபய விக்கிரம லியனகேயை நேற்று முன்தினம் நேரில் அழைத்து ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

ஏரோஃப்ளோட் ☞20

## அனலைதீவுக் கடற்கரையில் ஒதுங்கிய மனித எச்சங்கள்



கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்.அனலைதீவு கடற்கரையில் மனித எச்சங்கள் கரையொதுங்கியுள்ளன.

இது தொடர்பில் பிரதேச வாசிகள் கருத்து தெரிவிக்கையில் –

இந்தக் கடற்கரைக்கு அருகாமையில் சுடலை காணப்பட்டதாகவும், அதிலிருந்து மனித எச்சங்கள் கடல் அரிப்பின் மூலம் ☞20

## வட, கிழக்கு மீனவர், விவசாயிகளுக்கு இரண்டரை லட்சம் லீற்றர் ம.எண்ணை

### இலவசமாக வழங்க இந்தியத் தூதரகம் நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 05

வடக்கு, கிழக்கு மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கையின் பெயரில் இந்தியாவில் இருந்து மண்ணெண்ணை எடுத்து வரும் ஏற்பாட்டை இந்தியத் தூதரகம் மேற்கொண்டுள்ளது. ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பல விடயங்களிலும் இணக்கம் காணப் பட்டு விட்டதாகத் திருப்தி தெரிவித்தி ருந்தார்.

அவர் திருப்தி தெரிவித்தால் மட்டும் போதாது. அவர் இணக்கம் கண்ட விட யங்களுக்கு ஜனாதிபதியும் அவரது மொட்டுக் கட்சியினரும் இணங்கினால் தான் விவகாரம் சுமுகமாகத் தீர்ந்ததாகும்.

இந்தப் பின்புலத்தில், நேற்றுமுன் தினம் எதிர்க்கட்சிகளுடன் தான் பேசி இணக்கம் கண்ட விடயங்களை, ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எடுத் துரைத்து, அவரின் இணக்கத்தையும் பெறுவதற்காக நேற்று ஜனாதிபதியை நேரில் போய்ச் சந்தித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கூடவே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா ஆகியோரையும் ரணில் கூட்டிச்சென்றார்.

ஆனால் இவ்விடயம் குறித்துப் பேசு வதற்கு ஜனாதிபதி தமது பக்கத்தில் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை அழைத்து வைத்திருந்தார் என்று தெரிகின்றது.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட் சிகளை 21 ஆவது திருத்த விடயத்தை ஒட்டிச் சந்தித்தபோது அந்தக் கூட்டத்தில் ஆரம்பத்தில் இருந்தவர்கள். பின்னர், இடைநடுவில் நாசூக்காக நழுவியவர்கள்.

நேற்றைய சந்திப்பில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

இந்த 21 ஆவது திருத்த விடயம் நாளை மாலை அமைச்சரவைக்கு வரு கின்றது.

அங்கு நீதியமைச்சர் சமர்ப்பிக்கப் போகும் அல்லது அமைச்சரவை கடை சியில் அங்கீகரித்து வெளியிடும் 21 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை பார்த் தால், அதன் போக்கு எவ்வாறு அமையும் என்பதை ஓரளவு தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகளுடன் பிரதமர் ரணில் இணக்கம் கண்ட விட யங்கள் எல்லாம் அமைச்சரவை அங்கீ கரித்து முன்வைக்கும் வரைவில் இடம் பெற்றிருக்குமானால் நிலைமை சுமுக மாக முன்னேறும் என்று நம்பலாம்.

பிரதமர் ரணில் எதிர்க்கட்சிகளுடன் இணக்கம் கண்ட முடிவுகள், தீர்மானங் கள் 21 ஆவது திருத்த வரைவில் உள் செலுத்தப்படாது விட்டால் முரண்பாடு முற்றி, அரசியல் நெருக்கடி மோசமாகும் சூழல் தவிர்க்க முடியாத இருக்கும்.

இதற்கிடையில் நேற்று வெளியான சிங்கள வார இதழ் ஒன்று 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னரே இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் நியம னங்கள் என்று செய்தி வெளியிட்டு இருக் கின்றது.

இப்போதைய 21ஆவது அரசமைப்புத் திருத்த முயற்சியை ஒப்பேற்றி முடிக்கக் குறைந்தது ஆறு வார காலமாவது தேவை. அமைச்சரவை நியமனங்களை – இராஜாங்க அமைச்சர்கள் நியமனங் களை – விரிவுபடுத்தி நிறைவு செய்தால் அதையொட்டி அதிருப்தி, எதிர்ப்பு, விரக்தி எல்லாம் ஏற்படும். அது 21 ஆவது திருத் தத்தை நிறை வேற்றுவதைப் பாதிக்கச் செய்யும். ஆகவே இப்போதைக்கு அதைத் தவிர்க்க, அந்த அமைச்சரவை நியம னங்களை ஒத்திப்போடுவதற்கு அரசுத் தலைமை முடிவு செய்திருக்கின்றது போலும்.

அத்தோடு 21 ஆவது திருத்தம் என்ற விடயத்தை எட்டுவதற்கான பயண வண் டியின் முன்னால் ராஜாங்க அமைச்சர் கள் பதவி என்ற கரட்டைக் கட்டி, எம். பிக்கள் என்ற குதிரைகளைத் தடையின்றி ஓட வைப்பதற்கான தந்திரமாகவும் இது இருக்கலாம்.

இதேசமயம் 21 ஆவது திருத்தத்தில் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரத்தை ஒட்டி, அர சியல் கிசுகிசு செய்திகளை வெளியிடும் சமூக ஊடகம் ஒன்று பெரிய குண்டு ஒன்றை வார இறுதியில் போட்டிருகின்றது. அதுவும் தெற்கில் பெரிய அளவில் பேசப்படுகிறது.

இரட்டைப் பிரஜாவுரிமை சிக்கல் பஸி லுக்கு மாத்திரமல்ல, இப்போதைய நாடா ளுமன்றத்தில் அப்படி எண்மர் இருக் கின்றனர் என்று அந்த ஊடகம் அதிரடித் தகவல் வெளியிட்டிருக்கின்றது. ஜீவன் தொண்டமான், டயானா கமகே உட்பட பலர் அப்படி உள்ளனர் என்கின்னர் அந்த ஊடகத் தரப்பினர். உறுதிப்படுத் தப்படாத இந்தச் செய்திகள் இவ்விவ காரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றன என்பது உண்மை.

★ ★ ★

தென்னிலங்கையில் கடந்த இரண்டு நாள்களில் நடைபெற்ற மூன்று வெவ் வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூன்று பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

இவை தெற்கில் நடைபெற்றிருக் கின்றபடியால் அவை பயங்கரவாதம் அல்ல, பாதாள உலகக் குழுக்களின் நட வடிக்கை மட்டுமே. அப்படித்தான் அரசும் பொலிஸும் கூறுகின்றன.

தப்பித் தவறி இதில் ஓரிரண்டு சம்ப வங்கள் வடக்கு, கிழக்கில் நடந்திருந்தால் அவ்வளவுதான். உடனே புலிகள் இயக் கத்துக்கு ஒட்சிசன் கொடுத்து, உயிர்ப் பித்து, அது வீறு கொண்டு அலைவதாகக் கதைகள் வேறு கட்டியிருப்பார்கள்.

நமது தமிழர் தேசம் வாள்வெட்டு, கஞ்சாக் கடத்தலுடன் நிற்பதால் 'புலிப் புராணம்' இங்கு இப்போதைக்கு இல்லை என்று கூறலாம்.

– மின்னல் –

## வரி அதிகரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அந்தச் செய்தியின் விவரம் வரு மாறு:

எட்டு வீதமாகக் காணப்பட்ட பெறுமதி சேர் வரியை, இந்த மாதத் தொடக்கம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 12 வீதம் வரை அதிகரித்துள்ளதாக பிர தமர் அலுவலகம் தெரிவிக்கிறது.

இதன்படி, பெறுமதி சேர் வரியின் ஊடாக 2022–ஆம் ஆண்டு 91 பில்லி யன் ரூபாய் திரட்ட உத்தேசிக்கப்பட்ட நிலையில், புதிய வரி அதிகரிப்பின் ஊடாக அந்தத் தொகை 156 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவிக்கிறது.

அத்துடன், 11.25 வீதமாக காணப்பட்ட தொலைத்தொடர்பு வரியானது, 15 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு வரியின் ஊடாக 2022–ஆம் ஆண்டு 3 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அந்தத் தொகையானது புதிய வரி அதிகரிப்பால், அந்த வரி மூல மான உத்தேச வருவாய் எதிர்பார்ப்பு 5 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

பெறுமதி சேர் வரி மற்றும் தொலைத் தொடர்பு வரி ஆகியவற்றின் ஊடாக ஏற் கெனவே 94 பில்லியன் ரூபாய் மேல திக வருமானமாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது அந்தத் தொகை 161 பில்லியன் ரூபாயாக உயர்வடைந் துள்ளது.

அதேபோன்று, 2022–ஆம் ஆண்டு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரும் வகையில் மேலும் சில வரிகள் அதிகரிக் கப்படவுள்ளன எனப் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஆண்டு ஒன்றுக்கு 3 மில் லியன் ரூபாயாகக் காணப்பட்ட தனிநபர் வருமான வரி வரம்பு, எதிர்வரும் அக் டோபர் 1 முதல் 1.8 மில்லியன் ரூபா வரை குறைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதன்படி, தனிநபர் வருமான வரியின் ஊடாக 2022ம் ஆண்டு 5 பில்லியன் ரூபாய் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த புதிய வரி நடைமுறையின் கீழ் அந்த தொகை 20 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கவுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் முதல் 1.8 மில்லியன் ரூபாய் வருடாந்த வரு மானத்தைப் பெறும் தனிநபர்கள் வரு மான வரி செலுத்த வேண்டும் என அறி விக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரிச் சட்டம், பெறு மதி சேர் வரி சட்டம், தொலைத்தொடர்பு வரி சட்டம், பந்தயம் மற்றும் விளையாட்டு வரி சட்டம், நிதி முகாமைத்துவ சட்டம், தனிநபர் வருமான வரி சட்டம், பன்னாட்டு வருமான வரி அதிகரிப்பு உள்ளிட்ட மேலும் பல வரி சட்டங்கள் திருத்தப்படவுள் ளன.

இந்த வரித் திருத்தங்கள் பொதுமக் கள் வாழ்க்கையில் எவ்வாறான தாக்கத் தைச் செலுத்தும் என்பது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொரு ளியல் துறை பேராசிரியர் எஸ்.விஜே சந்திரன் கருத்து வெளியிட்டார்.

"நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொரு ளாதார சிக்கல், பண வீக்கம், வாழ்க்கை செலவோடு ஒப்பிடும்போது, இந்த வரி அதிகரிப்பானது, மக்களுக்கு மேலதிக சுமையாகவே இருக்கும் என்று நான் பார்க்கின்றேன். வாழ்க்கை செலவு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. பொருள்களின் விலைகள் மூன்ற் மடங்கு அதிகரித்தி ருக்கின்றன. பொருள்களுக்குத் தட் டுப்பாடு, மாதாந்தம் சம்பளம் எடுக்கின்ற வர்களுக்கு அவர்களின் வருமானம் அதி கரிக்கவில்லை. அன்றாட தொழில் செய்ப வர்களுக்கு வருமானம் இல்லை."

"பெரும்பாலான வணிக நிறுவனங் கள் தங்களுடைய வியாபார நடவடிக் கைகளை மூடியுள்ளன. லாபத்தை எட்டுவதை விட, செலவை கூட ஈடு செய்ய முடியாத நிலைமையில் பல நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிலைமையில் அர சாங்கம் வரியைக் கூட்டியிருப்பதற்கான ஒரேயொரு காரணம் என்னவென்றால், அரசாங்கத்தின் வருமானத்தை ஈடு செய்து கொள்வதற்காகவே. வரும் மாதங்களில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப் பதற்குக் கூட பணம் இல்லை எனப் பிர தமர் அண்மையில் கூறியிருந்தார். ஆகவே நிதிப் பற்றாக்குறையைத் தீர்த் துக் கொள்ளவே அரசாங்கம் இதைச் செய்திருக்கிறது, என பேராசிரியர் கூறி னார்.

"சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த னைகளுக்கு அமைய மேற்கொள்ளப் பட்டுள்ள இந்த வரி அதிகரிப்பானது, இலங்கை மக்களைப் பட்டினி சாவுக்குக் கொண்டு செல்லும்" என அவர் கூறுகி றார்.

"பொருள்களின் விலைகள் மீண்டும் 60 – 70 சதவிகிதம் அதிகரிக்கும். வரி விதிப்பை வர்த்தகர்கள், பொருள்களைக் கொள்வனவு செய்யும் மக்கள் மீதே சுமத் துவார்களே தவிர, அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆகவே பொருள் களின் விலைகள் மேலும் அதிகரிக்கும்.

அரிசி விலை கிட்டத்தட்ட 400 ரூபா வுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த வரி அதிகரிப்புக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையே பிர தான காரணம். சர்வதேச நாணய நிதியம் கொடுத்த மூன்று நிபந்தனைகளில் இதுவும் ஒன்று.

சர்வதேச நாணய நிதியத்தின் கட னைப் பெற்றுக் கொள்வதற்காக அர சாங்கம் மக்கள் மீது இந்தச் சுமையை சுமத்துகின்றது. வரி அதிகரிப்பு மாத்திரம் அல்லாமல், சர்வதேச நாணய நிதியத்தி ன் கடனைப் பெற்றுக்கொண்டால், அந்த கடனைச் செலுத்தும் சுமையும் மக்கள் மீதே சுமத்தப்படும். ஆகவே இலங்கை தொடர்ந்தும் கடன் நச்சு வட்டத்திற்குள் சுழல்வதற்கும் வருமான பற்றாக்குறை நச்சு வட்டத்திற்குள் சுழல்வதற்கும் இது காரணமாக இருக்கும். மேன்மேலும் மக் களை பொருளாதார நெருக்கடிக்குள் தள் ளுவதன் ஊடாக, மக்களைஒ பட்டினி சாவு நிலைமைக்குக் கொண்டு செல்ல இது வழி வகுக்கும், என பேராதனை பல் கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் குறிப் பிடுகின்றார்.

## வட, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கையில் நிலவும் கடும் பொரு ளாதார நெருக்கடி நிலைமயினால் மண் ணெண்ணை பெற்றுக்கொள்வதே முடி யாத காரியமாகவுள்ளது. இதனால் மீன வர்களும் விவசாயிகளும் தற்போது லீற் றர் 400 ரூபாவிற்குக் கள்ளச் சந்தையில் மண்ணெண்ணையைப் பெறும் அவலம் உள்ளதாக யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு சுட்டிக்காட்டப் பட்டது.

இதன்பிரகாரம் மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் பாவனைக்காக 2 லட் சத்து 50 ஆயிரம் லீற்றர் மண் ணெண்ணை எடுத்து வர யாழில் உள்ள இந்தியத்துணைத்தூதரகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு எடுத்து வரப்படும் மண் ணெண்ணை விவசாயிகளுக்கும் மீன வர்களுக்கும் இலவசமாக வழங்கத் தூதரகம் முன் வந்துள்ளது.

இந்த மண்ணெண்ணை காங்கேசன் துறை துறைமுகத்திற்கு எடுத்து வர முடி யுமா அல்லது கொழும்பு ஊடாகவே எடுத்து வரப்பட வேண்டுமா என்பது தொடர்பான பரிசீலனைகளும் இடம்பெற் றுள்ளன.

இது தொடர்பில் இந்தியத் தூதரக அதி காரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது கோரிக்கை கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் அடுத்த கட்டப் பணிகள் இடம்பெறுவதனை உறுதி செய்தனர்.

## லாஃப்ஸ்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 6,000 ரூபாவை விட அதிகரிக்கும் என பேச்சாளர் தெரிவித்தார்.

2,500 மெட்ரிக் தொன்கள் எரிவாயு வுடன் கூடிய கப்பல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடைய உள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் செவ்வாய் கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை மீள ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக லிட்ரோ மேலும் தெரிவித்துள்ளது.

அதுவரை வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ எரிவாயு நுகர் வோரை கேட்டுக்கொண்டுள்ளது.

## ஆங்கிலக் கற்கை நெறி



Occupational English Testing (OET) course was started on 27th May 2022 @ Ims Manipay.

Resource Person - Ms. Ramani Vaakeesan (Director, iLEAP club PVt)

Funding - Sri Kanagathurkai Amman Trust.

# சந்தேகத்துக்கிடமான விடுதிகள் யாழில் பொலிஸாரால் முற்றுகை!

யாழ்ப்பாண நகர் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இயங்கிய விடுதிகள் முற்றுகையிடப்பட்டுள்ளன.

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள விடுதிகளில் நடைபெறுகின்ற சமூக சீர்கேடு மற்றும் முறைகேடுகள் தொடர்பாக யாழ் மாநகர சபை அதிகாரிகளால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சில விடுதிகளில் சமூகப் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபட்டதாக கருதப்படும் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதில் சில விடுதிகளில் நடைபெற்ற முறையற்ற விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.











## மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-16.06.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-புனர்பூசம் 1
**கி.பா**-68ல்
**செவ்**-8ல்
**தகைமை**-G.C.EA/L
**தொழில்**-U,K PR (SOFTWARE)
**எதிர்பார்ப்பு**- இலங்கை மணமகள்

**பிறந்த திகதி**-16.07.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-25
**செவ்**-2ல்
**தகைமை**-H.N.D.E
**தொழில்**-(U.S.A PR) GREEN
**எதிர்பார்ப்பு** U.S.A+ CEYLON மணமகள்

**பிறந்த திகதி**-09.02.1989
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-உத்தரட்டாதி
**கி.பா**-35
**செவ்**-7ல்
**தகைமை**-B,B,A M.B .A
**தொழில்**-ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-2.11.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-N ஆண்
**நட்சத்திரம்**-உத்தரட்டாதி
**கி.பா**-27
**செவ்**-சூரி 6ல்
**தகைமை**-BANKING
**தொழில்**-BANKING OFFICER
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-12.04.1981
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-பூசம்
**கி.பா**-61
**செவ்**-சூரி 7ல்
**தகைமை**-B.A
**தொழில்**-DEVELAP MENT OFFCE
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-22.04.1984
**மதம்**-இந்து
**ஜாதி**-V சைவம்
**நட்சத்திரம்**-உத்தராடம் 1
**கி.பா**-12
**செவ்**-6ல்
**தகைமை**-H.N.DA
**தொழில்**- அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை சைவ மணமகள்

**பிறந்த திகதி**-02.07.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-பூசம் 4
**கி.பா**-24
**செவ்**-2ல்
**தகைமை**-B.SC
**தொழில்**-அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-27.10.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-V சைவம்
**நட்சத்திரம்**-உத்தரம்
**கி.பா**-20
**செவ்**-1ல்
**தகைமை**-G.C.G. A/L
**தொழில்**-BANKOFFICER
**எதிர்பார்ப்பு**- அரசசேவை சைவ மணமகள்

## மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-12.02.1996
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-விசாகம்
**கி.பா**-25
**செவ்**-9ல்
**தகைமை**-B.SC
**தொழில்**-AUSTRALYA PR
**எதிர்பார்ப்பு**- ENG, ACCOUN மணமகன்

**பிறந்த திகதி**-05.09.1997
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அத்தம்
**கி.பா**-33
**செவ்**-4ல்
**தகைமை**-QWANTRY SAVIYAR
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-31.08.1991
**மதம்**-R.C
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-கார்த்திகை 1
**கி.பா**-15
**செவ்**-10ல்
**தகைமை**-ACCOUTANT
**தொழில்**-AUSTRALYA PR
**எதிர்பார்ப்பு**- AUSTRALYA பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-04.09.1992
**மதம்**-RC
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-கேட்டை 3
**கி.பா**-8
**செவ்**-3
**தகைமை**-HOTTEL MANAGEMENT
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு - அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-27.09.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மூலம்
**கி.பா**-34
**செவ்**-6ல்
**தகைமை**-B.SC M.SC
**தொழில்**-AUSTRALYA PR
**எதிர்பார்ப்பு**- AUSTRALYA NEWZELAD மணமகன்

**பிறந்த திகதி**-28.08.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-18
**செவ்**-7ல்
**தகைமை**-B,SC IT
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- UK, CANADA U.S.A மணமகன்

**பிறந்த திகதி**-12.04.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பூரட்டாதி 2
**கி.பா**-7
**செவ்**-5ல்
**தகைமை**-B.SC IT
**தொழில்**- CANAD UK FRANCE
**எதிர்பார்ப்பு**- SINGAPOUR பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-26.07.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மிருகசீரிடம் 2
**கி.பா**-17
**செவ்**-4ல்
**தகைமை**-B,SC
**தொழில்**- BANK OFFICER
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.













காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தியாகியின் தினம்

**தங்கள் இருப்புக்காகவும், கௌரவ வாழ்வுக்காவும், பிறப்புரிமை அடிப்படையிலான சுதந்திரத்திற்காகவும், தங்களின் தாயக விடுதலைக்காகவும் ஈழத் தமிழர்கள் ஆயுத வழியில் நடத்திய போராட்டங்களை வன்முறை சார்ந்த பயங்கரவாதம் என தென்னிலங்கை அரசு புறமொதுக்கினாலும், தமிழர்களைப் பொறுத்தவரை அது ஒரு வீரகாவிய வரலாறு.**

**அதில் தோன்றிப் பளிச்சிட்ட விடிவெள்ளிகள் பலர். தமது இனத்துக்காகத் தங்கள் உயிரையே ஈகம் தந்த பல்லாயிரம் விடுதலைப் பேராளிகளைத் தன் இருப்புக்கும் நிலைப்புக்குமாக அர்ப்பணித்தவள் தமிழ்த் தாய்.**

**அந்த அன்னையின் வீரகாவியம் படைத்த தமிழ் மறவர்களில் மூத்தவராக விளங்குபவர் தியாகி பொன். சிவகுமாரன். அவரின் 48ஆவது நினைவுதினம் இன்றாகும்.**

**போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதற்காக எதிரியிடம் உயிருடன் சிக்காமல் இருக்கும் விதத்தில் தன்னுயிரையே தற்கொடையாகக் கொடுக்கும் தியாகத்தை ஈழத் தமிழரின் விடுதலைப் போரட்டத்தில் முன்மாதிரியாகக் காட்டிச் சென்றவர் தியாகி சிவகுமாரன்.**

**இந்தப் பத்தியில் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியபடி, இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் காலாதி காலமாக நிலைத்திருக்கும் தமிழர் தேசத்தை அடியோடு அழித்து, நிர்மூலமாக்குவதுதான் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிக்கு வந்த சகல பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளினதும் மேலாதிக்க வெறிக் கொள்கையாக இருந்து வருகின்றது. இந்தத் தாயகத்தில் தமிழர்கள் ஒன்றுபட்ட ஒரு தேசிய இனக்கட்டமைப்பாக தழைத்துக் காலூன்றி நிற்பதற்குக் காரணமான அடிப்படைக் கட்டுமானங்களை – அடித் தளங்களை – தேடித் தேடி அழிப்பதன் வாயிலாக, தமிழர் தேசத்தைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்குவதே சிங்களத்தின் ஒரே திட்டமாகவும் செயற்பாடாகவும் இருந்து வருகின்றது.**

**முதலிலே தமிழரின் இருப்புக்கே ஆதாரமான மொழி உரிமை பறிக்கப்பட்டது. அதன் பின்னர் கல்வி உரிமை, வேலைவாய்ப்பு – தொழில் உரிமை – என்று ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, நில உரிமையும் கூட அபகரிக்கப்பட்டது. தமிழர் தாயகத்தில் அவர்களின் பாதுகாப்பு உரிமையும் மறுக்கப்பட்டு, இறுதியில் வாழ்வியல் உரிமையும் துறக்கப்படும் இழி நிலை ஏற்பட்டுள்ளது.**

**இந்த ஒடுக்குமுறைக் கட்டமைப்பு வடிவங்களில் கல்வி உரிமையைப் பறிப்பதற்கு வசதியாகக் கல்வித் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது அப்போதைய சிறிமாவின் அரசு. மாணவனாகவே அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தவர் தியாகி சிவகுமாரன்.**

**எழுபதுகளின் முற்பகுதிகளில் போராட்ட உணர்வும் தீவிரமும், கொண்ட தமிழ் இளைஞர்களை ஊக்குவித்து, வளர்த்து, தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றுவதற்கான புறநிலையை ஏற்படுத்திக் கொடுத்த அமைப்புகளில் தமிழ் மாணவர் பேரவை முக்கியமானது. அந்தப் புரட்சிகர மரபில் தோன்றிய முத்துத்தான் பொன் சிவகுமாரன்.**

**ஈழ மக்களுக்காகத் தன்னையே தற்கொடையாகக் கொடுத்த வீரமறவன் சிவகுமாரன், தன்னுயிரை ஆகுதியாக்கியது இந்த ஜூன் 5இல்தான். அன்றைய தினம் உலக சுற்றாடல் தினம் என்பதால், அதற்கு மதிப்பளிக்கும் விதத்தில், அடுத்த நாளை தியாகி சிவகுமாரனுக்கான நினைவேந்தலாக தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக அறிவித்து, அதனை அனுஷ்டிக்கும் வழமை தமிழர் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

# மருந்துகள் இறக்குமதிக்கு கொவிட் நிதியிலிருந்து 180 கோடி ரூபாவை வழங்குமாறு ஜனாதிபதி பணிப்பு



அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக கொரோனா நிதியிலிருந்து 180 கோடி ரூபாவை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சுகாதாரத் துறை தொடர்பான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாதடுப்புநடவடிக்கைகளுக்காக நன்கொடையாளர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்பட்டது. இந்த நிலையில், கொரோனா தொற்று தற்போது கட்டுக்குள் உள்ளதால், சுகாதாரத் தேவைகளுக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் வைத்தியசாலைகளுக்குத் தேவையான 234 வகையான மருந்துகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

உலக சந்தையில் மருந்துகளின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு, உள்ளூர் மருந்துத் தொழிற்துறையை துரிதமாக அதிகரிப்பதற்கும் தேவையான மூலப்பொருள்களை இந்தியக் கடன் உதவியின் கீழ் பெற்றுக் கொள்வதற்குமான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

# சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மன்னாரில் கரையோரம் தூய்மையாக்கல்

சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் கறித்தாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரை பகுதியில் கரையோர தூய்மையாக்கல் நடவடிக்கை மற்றும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு வெள்ளிக்கிழமைகாலை9.30மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் கறித்தாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகை, மன்னார் நகர சபையின் தவிசாளர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக மாதர், கிராம அபிவிருத்தி



சங்க பிரதிநிதிகள், கிராம மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கரையோரதூய்மையாக்கல்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

பின்னர் மன்னார் நகர சபையின் உதவியுடன் கழிவுப் பொருள்கள் அகற்றிச் செல்லப்பட்டன, அதனைத் தொடர்ந்து மேற்படி பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வாகன அனுமதிப் பத்திரம் புதுப்பிக்க வரிசையில் காத்திருக்கும் சங்ககார!



இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார சங்ககார, வாகன அனுமதி பத்திரம் புதுப்பிப்பதற்காக சென்று வரிசையில் நிற்கும் படங்கள் சமூக வலைத்தளங்களில் தற்போது வெளியாகியுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தற்போது பொருள்களைக் கொள்வனவு செய்யவும் தேவைகளை நிறைவேற்றவும் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார சங்ககார வரிசையில் நிற்கும் படங்கள் வெளியாகி, சமூக ஊடகங்களில் தற்போது வைரலாகி வருகின்றன.

இவர், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கத்துக்கு எதிராகவும் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விற்பனைக்கு வழங்கிய எரிவாயுவை வவுனியாவில் பதுக்குவதற்கு முயற்சி!



வவுனியா பட்டாணிச்சூர் பகுதியிலுள்ள எரிவாயுக்கள் விநியோகஸ்தருக்கு வழங்குவதற்கென்று விநியோகிக்கப்பட்ட 20 எரிவாயுக்களையும் விநியோகஸ்தரால் பதுக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி மாவட்ட செயலக அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து காத்திருந்த மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூரில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக காத்திருந்த மக்களுக்கு வழங்குவதற்கு என்று 20 எரிவாயுக்கள் எடுத்து வரப்பட்டுள்ளன .

காத்திருந்த மக்களுக்கு வழங்காமல் இழுத்தடிப்பு செய்து எரிவாயுவைப் பதுக்குவதற்கு விநியோகஸ்தரால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து அங்கு நீண்ட நேரமாக காத்திருந்த மக்கள் மாவட்ட செயலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியமையையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகளின் தலையீட்டால் காத்திருந்த மக்களுக்கு 10 மணியளவில் காத்திருப்பு வரிசையின் இலக்கம், பெயர் விவரம் பெற்றுக் கொள்ளப்பட்டு எரிவாயுக்கள் விநியோகம் செய்து வைக்கப்பட்டன.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஒரு கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன






இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பால் HSBC வங்கி அனுசரணையில் இடர்முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

நாட்டில் கடுமையாக நிலவும் மருந்துப்பற்றாக்குறை தேவையைக் கணிசமான அளவு நிவர்த்திசெய்யும் வகையில் சுகாதார அமைச்சால் பட்டியலிடப்பட்ட முக்கியமான மற்றும் அத்தியாவசியமான மருந்துகளிலிருந்து இருதயம் சார்ந்த நோய்கள், புற்றுநோயியல், மயக்க மருந்துகள், முள்ளந்தண்டு சார்ந்த நோய்கள், எலும்பு அடர்த்தி சார்ந்த நோய்களுக்கு வழங்கப்படும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பால் HSBC வங்கி அனுசரணையில் இடர்முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து இக்கையளிப்பு நிகழ்வானது கொழும்பு ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் இராஜாங்க செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க, HSBCபதில் நிறைவேற்று அதிகாரி கெலும் எதிரிசிங்க, இலங்கைக்கான இடர் முகாமைத்துவ நிலைய இயக்குநர் மேஜர் ஜெனரல் சுதந்தரணசிங்க, பொது சுகாதார சேவைகளின் பிரதிப்பணிப்பாளரும், சுகாதார அமைச்சின் தொடர்பாடல் பணிப்பாளருமாகிய வைத்தியர் ஹேமந்த ஹேரத், பிரதமர் செயலகம் சார்பாக பாலித்த விக்கிரமகே, கூட்டுறவு நிலைத்தன்மை முகாமையாளர் திலினி பெர்ணாந்து, இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கி ணைப்பு இயக்குநர் பிர்சான் ஹசிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக தனியார் துறையினர் சிரமங்களை எதிர்கொண்டிருக்கின்ற நிலையில் HSBC வங்கி மற்றும் A-PAD நிறுவனம் வழங்கிய நன்கொடைகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் என வைத்தியர் சமன் ரத்நாயக்க கூறினார். அவர் தனது நன்றியைத் தெரிவித்ததோடு மக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்ட அத்தியாவசியமான மருந்துக்களை வழங்குவதற்கான முயற்சிகளை ஆதரிக்க தனியார் மற்றும் பொது பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். பொருள்களின் இருப்பு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு சாதகமான சூழ்நிலை இருக்கும்வரை மருந்து வழங்குவதில் உள்ள இடைவெளியைக் குறைப்பது ஒரு குறிப்பட்ட காலத்துக்கு அவசியம் என்றும் அவர் கூறினார்.

## ‘21’ குறித்து அரவிந்குமார் நீதி அமைச்சருக்கு கடிதம்

21ஆவது சட்ட திருத்தத்தின் கீழ் அமையவிருக்கும் சட்ட வாக்க சபையில், சிறுபான்மை சமூகங்கள் சார்பிலும், ஜனாதிபதியால் மூன்று பேர் நியமிக் கப்பட வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ. அரவிந்கு மார் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார், அனுப்பியுள்ள அவ சர கடிதமொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தொடர்ந்து அக்கடிதத்தில், 21ஆவது சட்ட திருத்தத்தின் கீழ் அமையவிருக்கும் சட்டவாக்க சபையில் சிறுபான்மை சமூ கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், எந்தவொரு சிறுபான்மை சமூகத்தவரும் கட்டாயம் இடம்பெற வேண்டுமென்று, குறிப்பிட்ட ஆவணத்தில் எந்தவொரு இடத்திலும் உத்தரவாதப் படுத்தப்படவில்லை.

21 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாட லின்போது, குறிப்பிட்ட சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒரு வரும், வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரும், இந்திய வம்சாவளி மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரும், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒருவரும் என்ற வகையில் நால்வர் அரசியல் திருத்தச் சட்டவாக்க சபைக்கு நியமிக்கப்படல் வேண்டும். அத்தோடு அவர்கள் நால்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும் - என்றுள்ளது.

## விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்காதுவிடின் உணவுத்தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும்

### பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



விவசாயிகள் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கும் நீர் பாய்ச்சுவதற்கும் எரிபொருள் இன்றித் திண்டாடி வருகின்றனர். இதனால், ஏராளமான விவசாயிகள் சிறுபோகச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய டீசலையும் மண்ணெண்ணெயையும் தடையின்றிப் பெற்றுக் கொடுக்க அரச உயர் அதிகாரிகள் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எரிபொருள் வழங்காதுவிடின் உணவுத்தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார். விவசாயிகள் எரிபொருள்களைப் பெறுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசின் தவறான நிதித் திட்டமிடுதலாலும் தவறான விவசாயக் கொள்கையாலும் நாடு உணவு உற்பத்தியில் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கடந்த பெரும்போகம் எதிர்பார்த்த அறுவடையைத் தராத நிலையில், சிறுபோக விளைச்சலும் 50 வீதமாகக் குறைவடையும் அபாயம் நேர்ந்துள்ளது.

உணவுத் தானியங்களின் இறக்குமதிக்கும் அரச கருவூலத்தில் பணம் இல்லாததால் நாடு மிகப்பெரும் உணவுப் பஞ்சத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

நாடு பட்டினியை எதிர் நோக்கியுள்ள நிலையிலும் கூட உணவுற்பத்தியில் அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இதுவரையில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களில் குறுகிய காலப் பயிர்களான சிறுதானியங்களினதும் அவரை இனப் பயிர்களினதும் செய்கையை ஊக்குவிப்பது அவசியமாகும். இதற்கு வேண்டிய விதைகள் கையிருப்பில் இருக்கின்ற போதும் உழவுக்கும் இறைப்புக்கும் வேண்டிய எரிபொருள்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு இதுவரையில் முன்னுரிமை வழங்கவில்லை.

உணவுற்பத்தியை ஓர் அவசர காலச் செயற்பாடாகக் கருதி விவசாயிகளுக்குத் தடையின்றி எரிபொருள் கிடைக்க வழி செய்யவேண்டும். இதற்கு மாவட்ட செயலர்களும், பிரதேச செயலர்களும் கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளும் தாமதமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல்வாதிகளும் இதற்கான அழுத்தங்களைக் கொடுக்க முன்வரவேண்டும். தவறின் உணவுத்தட்டுப்பாடு மென்மேலும் உக்கிரமடைவதோடு பட்டினிச் சாவுகள் நேர்வதும் தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

# மருத்துவக் கதிர்



# கருவுற்ற பெண்கள் கவனிக்க வேண்டியவை



**பல் பரிசோதனை**

பல்லில் ஏதாவது பிரச்சினை இருந்தால் கருவுறுவதற்கு முன்பே சரி செய்து கொள்ள வேண்டும். அவசியம் ஏற்பட்டால் இரண்டாவது Trimester–ல் செய்து கொள்ளலாம்.

**உடை**

நல்ல லூசான காற்றோட்டமான துணிமணிகள் தேவை. அதுவும் மார்பகப் பகுதியிலும் இடுப்பிலும் இறுக்கம் தரும் உடைகள் கூடாது.

சாதாரணமாகவே ஹை ஹீல்ஸ் செருப்பு போடுவதால் இடுப்பு வலியும், முதுகு வலியும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கர்ப்பமாக இருக்கும்போது கட்டாயம் சாதாரண செருப்புதான் போட வேண்டும். அதுவும் கொஞ்சம் பெரிய அளவில் போடுவது நல்லது. கால் வீக்கம் வராது.

**தோல் பராமரிப்பு**

கருவுற்ற தாயின் தோல் வறண்டு அல்லது அதிக எண்ணெய்ப் பசையாக மாறலாம். இதற்குத் தேவையான மாய்ஸ்ட்சரைஸர்கள் அல்லது லோன் பயன்படுத்தலாம். சாதாரண தேங்காய் எண்ணெய் மிகவும் நல்லது. நிறைய இரசாயனம் அடங்கிய மேல் பூச்சுகளைத் தவிர்ப்பது நல்லது. அவற்றால் ஒவ்வாமை ஏற்பட்டு, அதற்கு சிகிச்சை எடுக்கவேண்டி வந்தால் வீணான மன உளைச்சல் ஏற்படலாம் . சிலருக்கு தோலில் ஏற்படும் மாற்றங்கள் பிரசவம் ஆன பிறகு தானாக சரியாகிவிடும். ஹார்மோன் மாறுதல்களாலும் தோலில் பாதிப்புகள் ஏற்படலாம்.

தினமும் குளிப்பது மிக மிக முக்கியம். தண்ணீர் கிடைத்தால் தினம் இரண்டு முறைதன் சுத்தம் பேணுதல், தோல் நோய்கள் வராமல் பாதுகாக்கும். புத்துணர்ச்சியையும் தரும்.

**பொதுவான அறிவுரைகள்**

மகப்பேறு என்பது மகிழ்ச்சியான, உன்னதமான அனுபவம். அதை கணவன், மனைவி மற்றஉறவினர்கள்யாவரும் அனுபவிக்க வேண்டும்.

மனைவியின் உடல் எடை கூடுவது, முகம் வெளுப்பது, மார்பகம் பெரிதாவது, இடுப்புப் பகுதி பெருப்பது போன்றவை கர்ப்பக் காலத்தில் ஏற்படும் சாதாரண மாற்றங்கள். இதனை சுமையாக எண்ணி பயந்துவிடக்கூடாது.



வீட்டில் உள்ள அம்மா, மாமியார், அத்தை, பாட்டி போன்றோர் இதுபற்றிய விவரங்களை கர்ப்பிணிக்கு எடுத்துச் சொல்லி, அவள் மனத்தில் உள்ள பயத்தைப் போக்க வேண்டும்.

அதேபோல, மருத்துவரிடம் பரிசோதனைக்குச் செல்லும்போது தனக்குள்ள பிரச்சினைகளை சந்தேகங்களை விவரமாக எடுத்துச் சொல்லி சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

மருத்துவரும் பொறுமையுடன் தாயின் பயத்தைப் போக்கி, பேறுகாலத்தை தைரியத்துடன் எதிர்நோக்கத் தயார் செய்ய வேண்டும்.

மனைவியின் மாறும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஆதரவாகக் கணவன் நடந்துகொள்ள வேண்டும். கருவுற்ற பெண் அடிக்கடி கோபம் கொள்வது, எரிச்சல்படுவது, காரணம் இல்லாமல் அழுவது, அதிக உணர்ச்சி வசப்படுவது இயற்கையே! இந்த மாறுபட்ட நடவடிக்கைகளுக்குக் கணவன், அம்மா, மாமியார், உறவினர்கள் எல்லோரும் அவளோடு ஒத்துப்போய் உதவ வேண்டும். கர்ப்பிணி, சாதாரண மனநிலையில் இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும்.

குமட்டல், வாந்தி, இடுப்பு, முதுகு, அடி வயிற்றுப் பகுதியில் வலி, மலச்சிக்கல், கால் குடைச்சல் போன்றவை இயற்கையாகும்.

குமட்டல், வாந்தி குறைய, காலையில் அதிக நேரம் வெறும் வயிற்றோடு இருப்பதைத் தவிர்க்க வேண்டும். அதிகம் தண்ணீர் ஆகாரம் எடுத்துக் கொள்வது, மனத்துக்குப் பிடித்ததை சாப்பிடுவது நல்லது. அதிகமான புளிப்புச் சுவை, கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்க்கலாம்.

பாதுகாப்பான உடற்பயிற்சி தேவை. படுக்கும்போது ஒரே பக்கமாக அதிக நேரம் படுக்காமல், கை கால்களை அடிக்கடி நீட்டி மடக்கிவிடுவதால் முதுகு வலி, கை கால் வலி இருக்காது. வலி மாத்திரைகள் அதிகம் சாப்பிடக்கூடாது.

கால் பாதம் லேசாக வீங்கும். அதைப் பார்த்து பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. விரிந்து வரும் கருப்பையால், கால்களுக்குச் செல்லும் ரத்தக் குழாய்கள் அழுத்தப்பட்டு, நிணநீர் சரியாக மேலேறி வடியாததால் கால் வீக்கம் வரலாம். காலை நீண்ட நேரம் தொங்கப்போடாமல் இருக்கலாம். உட்காரும்போதோ படுக்கும்போதோ கால்களைச் சற்றே உயரமாக வைத்துக்கொண்டால் இந்த வீக்கம் வடிந்துவிடும். நாளாக நாளாக வீக்கம் அதிகமாகி உடல் பூராவும் வீக்கம் இருந்தால், மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை தேவைப்படும்.

பொதுவாக, கருவுற்ற தாய் நீண்டதூரம் பயணம் செய்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. மிகவும் உணர்ச்சிபூர்வமான விடயங்களை மனதில் போட்டுக் குழப்பிக்கொள்ளாமல் இருக்க வேண்டும்.

உடலுறவு மென்மையாக இருக்க வேண்டும். தடுப்பு ஊசிகளை தவறாமல் போட்டுக்கொள்ள வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி லேசான உடற்பயிற்சி செய்வது நல்லது. இது உடல், மனம் இரண்டும் புத்துணர்ச்சியோடு இருக்க உதவும்.

கருவுற்ற காலத்தில் மனத்தில் ஆத்திரம், காழ்ப்புணர்ச்சி, பிடிவாதம், பழி வாங்க நினைப்பது போன்ற எதிர்மறை உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும். கொடூரமான வன்முறைக் காட்சிகள் கொண்ட சினிமா, டிவி நிகழ்ச்சி ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். இது கருவில் வளரும் குழந்தையின் மன உணர்வுகளைப் பாதிக்கும்.

ஓய்வு நேரத்தில் மென்மையான இசை கேட்கலாம். அதிக சத்தத்துடன் கூடிய இசையைக் கேட்பது கூடாது. நல்ல புத்தகங்களைப் படிக்கலாம். ஆன்மிகம் சம்பந்தமான புத்தகங்களைப் படிப்பது நல்லது.

இனிமையான நினைவுகள், அமைதியான மனம், நிறைந்த உள்ளம், வன்முறையற்ற டிவி நிகிழ்ச்சிகள், மனத்தை வருடும் மெல்லிசை, தியானம், இறை வணக்கம் நல்லது.

கருவுற்ற தாயின் வீட்டு வேலைகளை மற்றவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும். மிகவும் கடினமான வேலைகளைத் தவிர்க்க வேண்டும். வேலை ஏதும் செய்யாமல் இருப்பதும் நல்லதல்ல. சதாகாலமும் ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதும் வேண்டாம். இது கெட்ட்பழக்கம் மட்டுமல்லாது, உடலுக்கு நோயை வரவழைக்கும். சுறுசுறுப்பாக தன்னால் முடிந்த வேலைகளைச் செய்வதால், பேறு காலத்தில் சிரமம் இருக்காது, பிரச்சினை இருக்காது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

கருவுற்ற 18 வாரங்களில் குழந்தை உதைப்பது, முண்டுவதை தாய் உணர வேண்டும். இல்லாவிடில், உடனடியாக மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

பிறந்தவுடன் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்ட ஏதுவாக மார்புக் காம்புகளைத் தயார் செய்ய வேண்டும். அவை உள்ளடங்கி இருந்தால், மருத்துவரின் ஆலோசனையுடன் அதைச் சரிப்படுத்த தேவையான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இப்படிப் பல கோணங்களிலிருந்தும் தாய்மையைப்புரிந்துகொண்டு திட்டமிட்டுச் செயல்பட்டால், குடும்பத்தின் வாரிசை மகிழ்ச்சியோடு பெற்றெடுக்கலாம்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 05th of June 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com





## IN THE PLAYGROUND

Decide if the sentences are about Picture A or Picture B, or both pictures.

1. Two boys are playing Tug of War. __
2. A little boy is waving. He is holding a grass roller. __
3. Two girls are holding a skipping rope and a boy is skipping. __
4. A boy is riding a scooter.__
5. Two children are sitting at a table. They are having a game of drafts. __
6. A child in red trousers is driving a go-kart. __
7. A boy is hopping! He is playing Hopscotch. __
8. Two children are sitting under a tree. They are reading a book. __
9. A blond girl is riding a tricycle. __
10. A little boy is passing a ball to a girl. __
11. A blond girl is holding a skipping rope, but she is standing still. __
12. A bumble bee is landing on a flower. __
13. Two teachers are standing outside the door. They are watching the children. __
14. Some children are chalking on the ground. __
15. The children are outside and they are playing. __
16. A boy is pushing a wheelbarrow. __
17. Two children are fighting over a hula hoop. __
18. Two children are in the sandpit and they are fighting over a spade.
19. A boy is pulling another boy in a truck. __
20. It's nice and sunny.__
21. There are some Easter eggs in a nest in the tree. __
22. A girl is drawing a smiley face with a piece of chalk. __
23. There are pictures of dinosaurs on the windows. __
24. A girl is standing beside the climbing frame. __
25. Two children are having a go on the seesaw. __
26. A girl in a pink dress is walking on step-on stilts. __



# WHAT HAPPENS WHEN A COUNTRY DECLARES BANKRUPTCY?

An Economic Perspective On The Leading Causes Of Financial Instability



According to an article from USA Today, there are at least seven countries that could potentially go bankrupt in the near future.

Belarus, Jamaica, Argentina, Belize, Venezuela, Greece, and Ukraine. The aim of this article is to find out what causes a country to go bankrupt and ultimately, what happens when a nation declares bankruptcy?

### WHY DO COUNTRIES GO BANKRUPT?

There are a number of economic forces that can implode any nation's economy, but a poor monetary policy must reign above many other factors when determining the financial position of any nation.

All seven national economies listed above instill relatively little confidence among investors. However, Jamaica's credit rating was upgraded by Moody's this year, and Argentina's and Belize's credit ratings remained stable. The remaining four countries, on the other hand, were downgraded.

A country's history of fiscal responsibility, including past defaults, and current compliance with IMF debt repayment plans, are major contributors to Moody's evaluations.

Extremely high debt levels, which while not always a feature of unhealthy economies, can also contribute to a country's poor credit rating. The debt of four of the seven countries was equal to more than 75% of GDP. In Jamaica and Greece, debt was well over 100% of GDP.

Political conflicts have also weakened some of these economies, which in turn has introduced more uncertainty and increased risk. Ukraine's conflict with Russia over its annexation of Crimea, for example, and the resulting U.S. and European sanctions, have contributed to the country's downgrade in March.

Borrowing funds in the international bond market is often far more costly for countries with poor credit ratings. Investors require greater returns on what they perceive to be riskier investments and charge higher interest rates as a result. For example, a 10-year U.S. Treasury Note has an annual yield of just 2.16%. By contrast, a comparable bond recently issued by Jamaica pays out 6.44% a year. Yields on 10-year Greek government bonds reached 29% in early 2012, just before the country defaulted.

Foreign investment is vital for most countries, particularly developing nations. To promote interest among investors, countries use a range of strategies. Often, these countries issue bonds in other, safer currencies in order to be more competitive in the international bond markets. Nations such as Argentina, Jamaica, Belize, and Ukraine have all issued bonds in other nations' currencies. Inflation rates for common currencies such as the dollar, yen, and euro are typically far lower and more stable than the currencies of the issuing countries. This means that investors do not need to worry as much about their investment losing value.

### WHAT HAPPENS WHEN A COUNTRY DECLARES BANKRUPTCY?

When a country actually goes bankrupt, the International Monetary Fund is a good place to go. When the Greece economy crashed in 2009, they went to the IMF, the European Central Bank and the European Commission, who collectively, issued the first of two international bailouts for Greece, which would eventually total more than €240 billion.

The bailouts came with conditions. Lenders imposed harsh austerity terms, requiring deep budget cuts and steep tax increases. They also required Greece to overhaul its economy by streamlining the government, ending tax evasion and making Greece an easier place to do business.

77% of bail-out money received by Greece went straight into the financial sector (banks, financial institutions etc.) instead of investments in education, health care, and infrastructure — leading the premise that bail-outs help the financial elite rather than the middle-class.

When a country fails to pay its creditors on time, it is said to go into "default", the national equivalent of going bankrupt. But sovereign defaults are quite different from business bankruptcies as it is far harder for creditors to repossess the assets of a sovereign entity than to repossess the assets of a company.

In the first instance, to curry favour in international markets, defaulting countries tend to restructure their debt rather than simply refusing to pay anything at all. But these so-called "haircuts", where the original value of a bond is reduced, can be much more painful for the holders of government bonds than a simple clip of the scissors.

After its $81 billion default in 2001, Argentina offered to pay its creditors a third of what it owed — 93% of the debt was eventually swapped for performing securities in 2005 and 2010. But the remainder, which is held by vulture funds and other investors, is still in dispute.

These "holdouts" are waiting for $1.3 billion plus interest. And when Greece defaulted in 2012, bondholders were forced to take hits as high as 50%. In less severe cases, countries may choose to restructure their debt by requesting more time to pay. This has the effect of reducing the present value of the bond — so it isn't entirely pain-free for investors.

Defaults can also be very painful for the offending country, particularly if they are unexpected and disorderly. Domestic savers and investors, anticipating a fall in the value of the local currency, will scramble to withdraw their money from bank accounts and move it out of the country.

To avoid bank-runs and precipitous currency depreciation, the government may shut down banks and impose capital controls. As punishment for default, capital markets will either impose punitive borrowing rates or refuse to lend at all. And credit-rating agencies will no doubt warn against investing in the country. But as history shows, in most countries yield-hungry lenders will eventually start lending again so long as they are adequately rewarded for the risk they are taking on.

Moreover, credit-default swaps — financial instruments which act as a form of insurance against sovereign and corporate defaults — allow bondholders to hedge their risk. But not all defaults are the same: Argentina defaulted again this year by refusing to pay $1.3 billion plus interest to the "holdouts" from 2001.

Critically, there is no international law or court for settling sovereign defaults, which helps explain why they are so varied in length and severity. More international regulation has been proposed — including powers to prevent minority holders from hijacking the process — but such conditions ultimately remain up to the issuing country.

# What is Bailout



Definition: Bailout is a general term for extending financial support to a company or a country facing a potential bankruptcy threat. It can take the form of loans, cash, bonds, or stock purchases. A bailout may or may not require reimbursement and is often accompanied by greater government oversee and regulations.


The reason for bailout is to support an industry that may be affecting millions of people internationally and could be on the verge of bankruptcy due to prolonged financial crises.

Description: Bailout policies come in various forms, the most common being direct loans or guarantees of third-party (private) loans to the rescued entity. These direct loans are often on terms favouring the entity being rescued. Sometimes even direct subsidies are provided to the parties concerned. Stock purchases are also not uncommon.

The government or the financing body places strict requirements such as restructuring of organisation, no dividend payment to shareholders, change of management and in some cases a cap on salaries of executives till a stipulated time period or the repayment of dues. This may also be followed by a temporary relaxation of rules that may impact the accounts of the rescued entity.

Bailouts have several advantages. First, they ensure continued survival of the entity being rescued under difficult economic circumstances. Secondly, a complete collapse of the financial system can be avoided, when industries too big to fail start to crumble. The government in these cases steps in to avoid the insolvency of institutions that are needed for the smooth functioning of the overall markets.

Bailouts also have their disadvantages. Anticipated bailouts encourage a moral hazard by allowing not only promoters but also other stakeholders (customers, lenders, suppliers) to take higher-than-recommended risks in financial transactions. This happens because they start counting on a bailout when things go wrong.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# அடைந்ததை அழித்தல்

ஒரு கடற்கரையிலே பெரிய நாவல்மரம் ஒன்றிருந்தது. அதில் எப்பொழுதும் பழங்கள் இருந்துகொண்டேயிருக்கும். அந்த மரத்தில் ரக்தமுகன் என்றொரு குரங்கு இருந்துவந்தது.

ஒருநாள் கராலமுகன் என்ற பெரிய முதலை ஒன்று அந்த நாவல் மரத்தின் அருகில் வந்தது. ரக்தமுகன் அதைப் பார்த்து, “நீ என் விருந்தாளி. அமுதத்துக்கொப்பான நாவற்பழங்களைத் தருகிறேன். சாப்பிடு!” என்று குரங்கு கூறி, நாவற்பழங்களை முதலைக்குக் கொடுத்தது.

பழங்களை முதலை சாப்பிட்டது. வெகுநேரம் குரங்குடன் பேசி இன்பமடைந்தபின் தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றது. இப்படியே நாள்தோறும் முதலையும் குரங்கும் நாவல்மரத்தின் நிழலையடைந்து நல்ல விடயங்களைப் பற்றிப் பேசி இன்புற்றுக் காலம் கடத்தி வந்தன. தான் சாப்பிட்டதுபோக மிஞ்சிய நாவற்பழங்களை முதலை வீட்டுக்குக் கொண்டுபோய் தன் மனைவிக்குக் கொடுத்து வந்தது.

ஒருநாள் முதலையின் மனைவி, “அமிர்தம் போலிருக்கும் இந்த நாவற்பழங்கள் உங்களுக்கு எங்கே கிடைக்கிறது?” என்று முதலையைக் கேட்டது.

“அன்பே, ரக்தமுகன் என்றொரு குரங்கு இருக்கிறது. அது என் நெருங்கிய நண்பன். அதுதான் இந்தப் பழங்களை எனக்கு அன்போடு தருகிறது” என்றது முதலை.

அதற்கு முதலையின் மனைவி, “அமிர்தம்போல் இருக்கும் இந்தப் பழங்களை எப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருப்பவனுடைய நெஞ்சும் கட்டாயம் அமிர்தம் போலத்தான் இருக்கும். நீ என்னை மதிக்கிறாய் என்றால் எனக்கு அந்தக் குரங்கின் நெஞ்சைக் கொண்டுவந்து கொடு. அதை நான் சாப்பிட்டு நோயும் முதுமையும் இல்லாமல் என்றும் உன்னோடு விளையாடிக்கொண்டிருப்பேன்” என்றது.

“அன்பே, முதலாவதாக அது நமக்குச் சகோதரன் மாதிரி. இரண்டாவதாக, அது நமக்குப் பழங்களைத் தருகிறது. எனவே அதை நான் கொல்லமுடியாது. இந்த வீணான ஆசையை விட்டுவிடு.” என்றது.

அதற்கு முதலையின் மனைவியோ, “அந்த குரங்கை எனக்காக கொடுக்கவில்லை என்றால் நான் இறந்துவிடுவேன்” என்று சொல்லி கோவமாக சென்றது.


அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அதன் கண்களில் நீர் நிறைந்தது. “இனி நான் என்ன செய்வேன்? அந்தக் குரங்கை எப்படிக் கொல்வது?” என்று சிந்தித்தபடியே குரங்கிடம் போயிற்று.

வெகுநேரம் கழித்து முதலை கவலையோடு வருவதைக் குரங்கு பார்த்தது.

“நண்பனே, ஏன் இவ்வளவு நேரம்? ஏன் சந்தோஷத்தோடு பேசமாட்டேன் என்கிறாய்? நல்ல நீதிகளையும் சொல்ல மாட்டேன் என்கிறாய்?” என்று குரங்கு கேட்டது.

“நண்பனே, என் மனைவி ‘ஏ நன்றி கெட்டவனே, என் முகத்தில் விழிக்காதே. தினந்தோறும் நீ நண்பனிடம் பழங்களைப் பெற்றுச் சாப்பிடுகிறாய். ஆனால் அதற்குப் பதில் உபசாரம் செய்யும் முறையில் அதை உன் வீட்டு வாசலுக்கும் நீ அழைத்து வரவில்லையே! இந்த செயலுக்கு உனக்கு மன்னிப்பே கிடையாது என்றது.

ஆகவே, “நீ ரக்தமுகனை நம் வீட்டுக்கு அழைத்து வா. அப்போதுதான் நீ பதில் உபசாரம் செய்ததாகும். இல்லாவிட்டால் நீ என்னை இனிமேல் உயிரோடு பார்க்க



முடியாது. மறு உலகத்தில் தான் பார்க்க முடியும்” என்று சொன்னாள். அவள் சொற்களைக் கேட்டுவிட்டு உன்னிடம் வந்திருக்கிறேன்.

“உன் விடயமாய் அவளோடு சண்டை போட்டதிலே இவ்வளவு நேரமாகிவிட்டது. நீ என் வீட்டுக்கு வா! என் மனைவி ஆவலோடு உன்னை எதிர்பார்த்து, வரவேற்பதற்குரிய ஏற்பாடுகளை செய்திருக்கிறாள்.” என்றது முதலை.

“நண்பனே, அண்ணி சொன்னது சரிதான். எவ்விதமெனில், தருவது, பெறுவது மனம்விட்டுப் பேசுவது, கேட்பது விருந்து உண்பது, படைப்பது இவை ஆறும் நட்புக்கு அடையாளங்கள் அல்லவா? ஆனால், நான் காட்டிலும் இருப்பவனாயிற்றே! உங்களுடைய வீடு நீருக்கடியில் அல்லவா இருக்கிறது! அங்கே நான் எப்படி வரமுடியும்?” என்றது குரங்கு.

“நண்பனே, கடலுக்கடியில் ஒரு அழகிய மணல்திட்டில் என்வீடு இருக்கிறது. எனவே என் முதுகில் ஏறிக்கொண்டு பயமில்லாமல் இன்பமாய் வா!” என்றது முதலை.

குரங்குக்கு ஆனந்தம் பிறந்தது. “நண்பனே, அப்படியானால் சீக்கிரமாகக் கிளம்பலாமே, ஏன் தாமதிக்க வேண்டும்? இதோ நான் உன் முதுகின்மேல் ஏறிக்கொள்கிறேன்” என்று சொல்லிவிட்டு, குரங்கு முதலையின் முதுகின்மேல் ஏறிக்கொண்டது.

ஆனால், ஆழமான கடலில் முதலை போவதைப் பார்த்துக் குரங்கு பயந்து நடுங்கிப்போயிற்று. “அண்ணா மெதுவாகப் போ! அலைகள் அடித்து என் உடம்பெல்லாம் நனைந்துவிட்டது” என்றது.

அதைக் கேட்டதும் முதலைக்கு ஒரு யோசனையுண்டாயிற்று. இந்தக் குரங்கு என் முதுகிலிருந்து நழுவினால் ஒரு அங்குலம் கூட அப்பால் செல்லமுடியாது, அத்தனை ஆழமான கடல் இது. என் பிடியில் சிக்கிக் கொண்டுவிட்டது. ஆகவே இதனிடம் என் நிஜ நினைப்பைச் சொல்லி விடுகிறேன். தன் இஷ்ட தெய்வத்தை அது நினைத்துப் பிரார்த்தித்துக் கொள்ளட்டும் என்று எண்ணியது.

குரங்கைப் பார்த்து, “நண்பனே, என் மனைவி சொல்லியபடி உன்னை நம்பவைத்து, உன்னைக் கொல்வதற்காக வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். இனி உன் இஷ்ட தெய்வத்தை பிரார்த்தித்துக்கொள்” என்றது முதலை.

“அண்ணா, உனக்கோ அண்ணிக்கோ நான் என்ன தீங்கு செய்தேன்? என்னை ஏன் கொல்லப்பார்க்கிறீர்கள்?” என்று குரங்கு கேட்டது.

“கேள், நீ கொடுத்த பழங்கள் அவளுக்கு அமிர்தம் போல் ருசியாயிருந்தன. ஆகவே உன் நெஞ்சைத் தின்ன வேண்டும் என்று அவள் ஆவலாயிருக்கிறாள். அதனால்தான் இப்படிச் செய்தேன்” என்றது முதலை.

உடனே சமயோசித புத்தியுள்ள குரங்கு, “அடடா அப்படியா சங்கதி? அதை நீ ஏன் அங்கேயே என்னிடம் சொல்லவில்லை? நண்பனே, ருசி மிகுந்த நாவற்பழங்களை நாவல்மரத்தின் பொந்தில் மறைத்து வைத்திருக்கிறேன். முன்பே சொல்லியிருந்தால் அண்ணிக்காக அதை எடுத்துக்கொண்டு வந்திருப்பேனே! அந்த ருசி மிகுந்த நாவற்பழங்களை சாப்பிட்டால் நீண்ட காலம் இளமையுடன் உயிர் வாழலாம்!” என்றது குரங்கு.

அதைக் கேட்டதும் முதலைக்கு ஆனந்தம் ஏற்பட்டது. “நண்பனே, அப்படியானால் அந்த நாவற்பழங்களை எனக்குக் கொடு, என் துஷ்ட மனைவி அதைச் சாப்பிட்டு தன் உபசாவத்தை முடிப்பாள். உன்னை நாவல் மரத்துக்கே திரும்ப அழைத்துச் செல்கிறேன்” என்று சொல்லிற்று.

சொன்னபடியே முதலை நாவல்மரத்தடியை நோக்கித் திரும்பிச் சென்றது. வழி நெடுக குரங்கு ஒவ்வொரு தெய்வத்தையும் நூற்றுக்கணக்கான முறை வேண்டிக் கொண்டே போயிற்று.

எப்படியோ ஒருவிதமாக கரைக்கு வந்ததும், உயர உயரத் தாவிக் குதித்துச் சென்று அந்த நாவல் மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. ஏறிக்கொண்டே, “நல்லகாலம்! நான் பிழைத்துக்கொண்டேன். நம்பிக்கை வைக்கத் தகாதவனிடம் நம்பிக்கை வைக்காதே! நம்பிக்கையானவனையும் நம்பாதே! நம்பிக்கை வைப்பதால் விபத்து ஏற்பட்டு வேரோடு அழித்து விடுகிறது. என்று சொல்வதில் நியாயமிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நிஜமாக நான் மறுபிறப்பெடுத்திருக்கிறேன்” என்று குரங்கு எண்ணியது.

குரங்கிடம் முதலை, “நண்பனே, நாவற்பழங்களை கொடு எனக்கு” என்றது.

குரங்கு சிரித்துவிட்டு நிர்ப்பயமாகப் பதில் சொல்லிற்று. “சீ, மூடா! நம்பிக்கைத் துரோகி! உன்னுடைய உண்மையான குணம் எனக்கு தெரிந்துவிட்டது. உன் வீட்டைப் பார்த்துக்கொண்டு போய்விடு. இனிமேல் இந்த நாவல் மரத்தடிக்கு வராதே! என்றது குரங்கு.

“முட்டாள்தனமாக இதனிடம் என் எண்ணத்தை ஏன் வெளியிட்டேன்? எப்படியாவது இதனுடைய நம்பிக்கையைப் பெற வழியுண்டா? நம்பவைக்கப் பேசிப்பார்க்கிறேன்” என்று எண்ணியது.

“நண்பனே, விளையாட்டுக்காகத்தான் அப்படிச் சொன்னேன். உன் மனதையறிய விரும்பினேன். அவ்வளவுதான். என் வீட்டுக்கு விருந்தாளியாக வா! அண்ணி உன்னைப் பார்க்க ஆவலோடிருக்கிறாள்” என்று முதலை சொல்லிற்று.

“துஷ்டா, உடனே நீ போய்விடு. நான் வரமாட்டேன்” என்றது குரங்கு. அதைக்கேட்டு முதலை மிகுந்த வெட்கமடைந்தது. அந்த இடத்தை விட்டுச் சென்றது.

**நீதி: ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற நினைத்தால், கண்டிப்பாக ஒருநாள் எல்லாவற்றையும் இழந்து ஏமாறுவான்!**

# எறும்பு



சின்ன சின்ன எறும்பே
சிங்கார சிற்றெறும்பே!


உன்னைப் போல் நானுமே
உழைத்திடவே வேணுமெ!

ஒன்றன் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய்!

நன்றாய் உம்மைக் கண்டே
நடந்தால் நன்மை உண்டே!

# வாத்து

- குரு அரவிந்தன் -



குவாக் குவா வாத்து – நீ
எங்கு போனாய் நேற்று
பார்த்துப் பார்த்துப் பார்த்து
கண்ணும் பூத்துப் போச்சு!

மெல்ல மெல்ல நடக்கிறாய்
மேலும் கீழும் பார்க்கிறாய்
பாடிப் பாடித் திரிகிறாய்
பள்ளி எங்கே கொள்கிறாய்?

தண்ணீரில் நீந்துகிறாய்
தலையை மூழ்கி எழுகிறாய்
வாயில் மீனைக் கவ்வுகிறாய்
வாவ் என்றே தின்கிறாய்!

கூட்டமாகத் திரிகிறாய்
கூடிக் கூடி மகிழ்கிறாய்
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்று சொல்லித் தருகிறாய்!





# சுற்றுச்சூழல் மாசுபாடு

## கல்விக்கதிர்

- அகரன் -



சுற்றுச்சூழல் தினம்
சிறப்பு கட்டுரை

உலக சுற்றுச்சூழல் நாள் ஐக்கிய நாடுகள் அவையால் ஆண்டுதோறும் ஜூன் 5 ஆம் நாள் புவிக்கோளையும் அதன் இயற்கையையும் காப்பாற்றத் தேவைப்படும் சுற்றுச்சூழல் செயல்பாட்டைப் பற்றிய நேரடியான உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கொண்டாடப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபையால் 1972 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாசு என்பது சுற்றுப்புற சூழலுக்கு கேடு விளைவிக்கும் பொருள்களை சுற்றுப்புறத்தில் வெளியிடுவதாகும். பொதுவாக மனிதனின் செயல்பாடுகளால் சுற்றுப்புறத்திற்கு கேடு விளைவிக்கப்படும் பொருள்களை வெளியிடுவதே மாசுபடுதல் என்கிறோம்.

மாசுபடுதல் இயற்கை மற்றும் மனித செயல்கள் என இரு காரணிகளால் ஏற்படுகின்றது.

இயற்கையாக ஏற்படும் மாசு நம் வாழ்வில் அதிக தாக்குதலை ஏற்படுத்தாது.

சுற்றுச்சூழல் மாசுப்பாட்டின் வகைகள்

1. நிலம் மாசுபாடு
2. நீர் மாசுபாடு
3. காற்று மாசுபாடு
4. ஒலி மாசுபாடு
5. வெப்பம் மாசுபாடு
6. கதிரியக்கம் மாசுபாடு
7. காற்று மாசுபாடு

புவியில் உயிரினம் வாழ்வதற்கு வளிமண்டலம் இன்றியமையாதது. வளிமண்டலம் பல வாயுக்களின் கலவையாகும். இதில் N2 78.09% O2 20.95%, Ar 0.93%, CO2 மற்றும் சில குறைந்த அளவுள்ள வாயுக்கள் அடங்கியுள்ளன.

மனிதனுக்கு மிகவும் அவசியமான ஒட்சிசன் வளிமண்டலத்திலுள்ளது.

### காற்று மாசுபடும் முறை:

காற்று இரு வழிகளில் மாசுபடுகிறது. அவை

### இயற்கை நிகழ்வுகளால் காற்று மாசுப்படுதல்



எரிமலை வெடித்தலால் வெளிப்படும் தூசி, சாம்பல், புகை, கார்பனீரொட்சைட் மற்றும் பல வாயுக்கள் வெளிப்படுவதாலும் விண்வெளியில் உள்ள எரிகற்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விழுவதால் தோற்றுவிக்கப்படும்.

செடிகளிலிருந்து வெளிவிடப்படும் நீராவிப்போக்கின் காரணமாகவும் நுண்ணுயிர்களிலிருந்து வெளிவிடப்படும் CO2 மூலமும் நிலம் மற்றும் கடலிலிருந்து வெளிவரும் உப்பு மற்றும் மண் பொருள்களாலும் காற்று மாசுபடுகிறது.

### மனித நடவடிக்கைகளால் காற்று மாசுபடுதல்

வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் குப்பைகளை எரித்தல் மூலமாகவும் வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுக்காற்று மூலமும் ஏற்படுகிறது.

தொழிற்சாலைகளிலிருந்தும் சுரங்கங்களிலிருந்தும் பெரிய நகரங்களிலிருந்தும் குவிக்கப்படுகின்ற திடக் கழிவுப் பொருள்களினாலும் ஏற்படுகிறது.

அணுக்கரு உலைகளிலிருந்து அணுசக்தி வெளியாவதாலும் அணுக்கரு பிளவு போன்றவற்றால் ஏற்படும் கதிர்வீச்சாலும் ஏற்படுகிறது.

### காற்று மாசுபடுதலைக் கட்டுப்படுத்துதல்

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் மாசுபடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

தொடர்ந்து மாசுபடுதல் நிலையையும், அளவையும் கண்காணித்து அதற்கு ஏற்ப திட்டங்களை வகுத்தல்.

அறிவியல் ரீதியில் மாசுபடுதலுக்கு காரணமாக உள்ள மூலப் பொருள்களை அறிந்து அவற்றின் பயன்பாட்டினைக் குறைக்கச் செய்தல்.

வீடுகள், தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையின் அளவினை குறைந்த அளவாகக் குறைத்தல்.

பட்டாசுகளை உபயோகிப்பதைத் தவிர்த்தல்.

குப்பைகளை குப்பைத் தொட்டியில் போட வேண்டும் எரிக்கக் கூடாது.

### நீர் மாசுபடுதல்

உயிரினங்களுக்கு மிகவும் அடிப்படையான தேவைகளுள் ஒன்று நீர் ஆகும். நாம் வாழும் உயிர்க்கோளமாகிய புவியில் உள்ள மொத்த நீரில் ஒரு சதவீதம் தான் சுத்தமான நீராக உயிரினங்களுக்கு கிடைக்கிறது.

நிலத்தடிநீர் மூலம் பெருமளவு நீர் கிடைத்தாலும் வளர்ந்து வரும் மக்கள் தொகையின் காரணமாகவும் தொழிற்சாலைகளின் நீர்த் தேவைகள் அதிகரிப்பதாலும் நீரின் அளவு குறைவதோடு நீரின் தரமும் குறைந்து கொண்டே வருகிறது.

### நீர் மாசுபடுத்தலுக்கான காரணங்கள்

இயற்கை: மண் அரிப்பு, எரிமலை வெடிப்பு, நிலச்சரிவு, உயிரினங்கள் அழுகிப்போதல் ஆகியவற்றால் நீர் மாசுபடுதல் ஏற்படுகிறது. ஆறுகள் அரித்து வரும் பொருட்கள் நீரில் கலந்து நீர் தூய்மைக்கேட்டைத் தோற்றுவிக்கின்றன.

மனித நடவடிக்கைகள்: தொழிற்சாலைக் கழிவுகள், விவசாயக் கழிவுகள், பெருகி வரும் நகரமயமாதல்,கலாச்சாரம்,கட்டமைப்புகள் ஆகியவற்றால் ஏற்படுகின்றன. மேலும் நகரத்தின் சாக்கடைகள், விவசாயத்திற்கு பயன்படுத்தும் இரசாயன உரங்கள் மற்றும் மருந்துகள் மூலமாகவும் குளங்களில் கால்நடைகளை குளிப்பாட்டுவதாலும், குப்பைகளை குளங்களிலும், ஆறுகளிலும் கொட்டுவதாலும் நீரின் தன்மை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

### நீர் மாசுபாட்டின் விளைவுகள்

நீர் மாசுபாட்டினால் மனிதர்கள் பாதிக்கப்படுகின்றமையுடன், விலங்குகள் மற்றும் மீன்கள், பறவைகளும் பாதிக்கப்படுகின்றன.

மாசுபாடடைந்த தண்ணீர் குடிப்பதற்கும், விளையாடுவதற்கும், விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படாமல் போகிறது.

மாசினை ஏற்படுத்தும் பொருள்கள் நிலத்தினால் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீரினையும் பாதிக்கின்றது.

### நீர் மாசுபடுதலின் வகைகள்:

நிலத்தின் மேல் உள்ள நீர்மாசுபடுதல்
ஏரிகளில் உள்ள நீர்மாசுபாடு
நிலத்தடி நீர் மாசுபடுதல்
கடல்நீர் மாசுபடுதல்

### நீர் மாசுபாட்டினைக் கட்டுப்படுத்துதல்


குப்பைகளை பொதுக்குழாய்கள், கிணறுகள் மற்றும் இதர நீர் ஆதாரங்களுக்கு அருகில் கொட்டக்கூடாது.

பொதுத் தண்ணீர் குழாய்களை சேதப்படுத்தக்கூடாது.

### நிலம் மாசுபடுதல்

உயிர்க்கோளத்தில் உள்ள உயிரினங்களுக்கு நீரைப் போன்று நிலத்திலுள்ள மண்ணும் அவசியமாக தேவைப்படும் பொருள் ஆகும்.

வளமான மண்ணிலிருந்துதான் உயிரினங்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருள்களை விளைவிக்க இயலும்.மண் தோன்றுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது.



மனித நடவடிக்கைகளாலோ அல்லது இயற்கை வழியிலோ மண்ணின் தரம் குறைந்தால் அதனை நிலம் அல்லது மண் மாசுபடுதல் என்கிறோம்.

### மண் மாசு கட்டுப்பாடு

* பூச்சிக் கொல்லியின் பயன்பாட்டை குறைத்தல்
* சரியான அளவில் உரத்தினை பயன்படுத்துதல்
* பயிர் விளைச்சல் நுட்பத்தினை அதிகரிப்பதன் மூலம் களை வளர்ச்சியை தடுத்தல்
* மேய்தலை கட்டுப்படுத்துதல் மற்றும் வன மேம்பாடு
* காற்று அரிப்பினை தடுக்க காற்று தடுப்பான் அல்லது கவசத்தினை அமல்படுத்துதல்
* மண் அரிப்பினை தடுக்க அணை மற்றும் சரிவு பகுதியில் மண் கட்டமைப்பு தாவரங்கள் அல்லது புற்களை வளர்த்தல்
* காடு வளர்ப்பு

### ஒலி மாசுபடுதல்

அதிகமான சத்தத்தின் காரணமாக மனிதனுக்கு ஏற்படும் மனச்சோர்வு மற்றும் மன அமைதியின்மையையே ஒலி மாசுபடுதல் என்கிறோம். அதிக அழுத்தமும் தீவிரமும் கொண்ட ஒலி தான் மாசுபட்ட ஒலியாகக் கருதப்படுகிறது.

ஒலி அளவானது டெசிபல்(db) என்ற அலகால் அளவிடப்படுகிறது.

* 0 - 30 db - மிகவும் மெதுவான ஒலி
* 50 - 55 db - தூக்கத்தை கலைக்கும் ஒலி
* 60 - 90 db - சாதாரணமான ஒலி
* 90 - 95 db - மாற்ற முடியாத நரம்பியல் தாக்கத்தை தோற்றுவிக்கும் ஒலி
* 150 - 160 db - சில விலங்குகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒலி

ஒலி மாசுபடும் விதத்தை வைத்து கீழ்க்கண்ட வகைகளில் பிரிக்கலாம்.

இயற்கையாகத் தோன்றுபவை : இடி, மிக வேகமாக வீசும் காற்று, புயல், ஆலங்கட்டி மழை, இடியுடன் கூடிய காற்று, நீர் வீழ்ச்சி, அதிக மழை போன்றவை.

உயிரினங்களால் தோன்றுபவை: விலங்கினங்களின் சத்தம், மனிதர்களின் நடவடிக்கைகள்

செயற்கையாகத் தோன்றுபவை : மனிதனின் செயல்பாடுகளான மிகுந்த சத்தத்துடன் இசைக்கருவி வாசித்தல், பட்டாசு வெடித்தல், விமான ஒலி, தொழிற்சாலைகளில் இருந்து வரும் ஒலி, வாகனங்கள் தோற்றுவிக்கும் ஒலி போன்றவை.

### ஒலி மாசுபடுதலினால் ஏற்படும் விளைவுகள்

* காதுகேளாமை
* உடலியல் சார்ந்த விளைவு
* உளவியல் சார்ந்த விளைவு
* சோர்வு மற்றும் தலைவலி
* தொழில்ரீதியான இரைச்சல்
* சமூக இரைச்சல்

### ஒலி மாசுக்கட்டுப்பாடு

தொழிற்சாலையில் வேலை செய்யும் வேலையாட்களை பாதுகாக்க காதுகளில் பொருத்தப்படும் கருவியை பயன்படுத்துதல்.

நெடுஞ்சாலைக்கு அருகிலுள்ள நகர குடியிருப்புகளில் கட்டமைப்பானது ஒலித்தடையை கொண்டு அமைப்பதால் போக்குவரத்து வாகனங்களின் இரைச்சலைக் குறைக்கலாம்.

ஒலி மாசுபாட்டினை உட்கிரகிக்கவும், தடுக்கவும் குடியிருப்பு பகுதி மற்றும் நகரப் பகுதி போன்றவற்றை பசுமை நகரமாக மாற்ற தாவரங்களை வளர்த்தல் வேண்டும்.

### வெப்ப மாசுபாடு

அதிக வெப்ப கழிவு மற்றும் வெப்ப நீரோட்டம் போன்றவற்றின் காரணத்தால் வெப்ப நிலை மாசுபாடு உண்டாகிறது. வெப்பநிலை மாசுபாடு என்பது மனிதனின் செயலால் நீரில் ஏற்படும் தட்பவெப்பநிலையின் ஏற்றம் அல்லது இறக்கமாகும்.

மின் நிலையம் மற்றும் தொழிற்சாலை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நீரினால் வெப்பநிலை மாசுபாடு உண்டாகிறது.

### விளைவுகள்

வெதுவெதுப்பான நீரில் குறைந்த அளவு O2 உள்ளது. ஆகையால் அங்க பொருள்களின் மக்கும் திறனானது குறைகிறது. பச்சை பாசியானது நிலப்பச்சை பாசியாக மாறுகிறது.

பல விலங்குகளின் இனம்பெருக்கம் பாதிக்கிறது.ஒரு நன்னீர் வகை மீன்களின் முட்டையிலிருந்து குஞ்சு பொரித்தல் மற்றும் சால்மன் இனத்தின் முட்டையிடுதல் போன்றவை உயர் வெப்பநிலையில் ஏற்படும் போது தோல்வியடைகிறது.

தட்பவெப்பநிலையில் 1 – 2 செல்சியஸ் அளவு மாற்றங்கள் நிகழும் போது உயிரினங்களின் வளர்ச்சி மாற்றத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மற்ற உயிரியல் அணுக்களும் பாதிக்கிறது.மேலும் சவ்வூடு பரவலுக்கு செல்லும் உயிரணுக்களின் ஊடுருவும் தன்மை, புரதத்தின் திரளும் தன்மை,நொதி வளர்ச்சி மாற்றம் போன்றவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் இனப்பெருக்கம் மற்றும் இறப்பு விகிதம் போன்றவற்றில் பாதிப்பு ஏற்படுகிறது.

### கதிரியக்க மாசுபாடு

கதிரியக்கம் என்பது புரோட்டான், இலத்திரன் மற்றும் காமா போன்ற சில அணுக்களில் இருந்து வெளிப்படும் ஒரு வகை ஆற்றல் மிகுந்த கதிர்வீச்சாகும். இந்த கதிர்வீச்சு தான் கதிரியக்க மாசுபாட்டிற்கு காரணமாகும்.

சுரங்கத்தொழில், புளோடோனியம் மற்றும் தோரியத்தின் தூய்விப்பு மற்றும் உற்பத்தி, வெடிக்கத்தக்க மற்றும் அணு ஆயுதங்கள், அணு சக்தி நிலையம், எரிபொருள் மற்றும் கதிரியக்க சமதானி உற்பத்தி போன்றவை மனிதனால் உருவாக்கப்படும் கதிரியக்கத்திற்கு ஆதாரங்களாகும்.

### கதிரியக்க மாசுபாட்டினால் உயிரியலில் தாக்கம்:

மக்கள் புற்றுநோய் இரத்த புற்றுநோய் மற்றும் பிற நோய்கள் போன்றவற்றால் பாக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

புறஊதாக் கதிர்கள் கண்விழித்திரையிலுள்ள செல்களை தாக்கும் போது குருட்டுத்தன்மை ஏற்படுகிறது. மேலும் இவை தோலின் வளர்ச்சி செல்களை பாதிக்கிறது.

X - கதிர் உயிரணுக்களில் ஊடுருவி செல்வதால் பல்வேறு உயிரணுக்களின் பரிணாம வளர்ச்சியானது குறைகிறது.

மேலும் கண் பார்வை கோளாறு, மலட்டுத் தன்மையை அதிகரித்தல், தோல் புற்றுநோய் மற்றும் நுரையீரல் கட்டி போன்றவை உருவாகிறது. Sr - 90 என்பது கல்சியத்தின் கோளாறு. இவை எலும்புகளை தாக்கி எலும்பு புற்று நோயை உருவாக்குகிறது.

## சிறுகதை

திருக்கோவில் கவியுவன்

# மரணத்தின் தூது

இருட்டு கும்மிருட்டு! என் அடிமனதைப் போல் வெளியில் ஒரேயிருட்டு.

ராத்திரியை சிவராத்திரியாய் மாற்றிக் கொண்டிருக்கும் நான். என் கன்ன மேட்டில் வழிந்து செல்லும் கண்ணீர் நதி. என் பாதம் ஈரப்படுகிறது. சில துளிகள் பாதங்களையும் சந்திக்கதிராணியில்லாமல் நிலத்தை நோக்குகின்றன.

‘இது பொய்! நான் நம்பமாட்டன். என் மகன் செத்திருக்க மாட்டான்! நான் நம்பமாட்டன்! நான் நம்ப மாட்டன்’

ஈனஸ்வரத்தில் என் மனைவியின் முனகல் கேட்கிறது. இரவு முழுவதும் ஒப்பாரி வைத்து இப்போது இயலாமையில் ஒரு முனகல். அவள் நெஞ்சுக் கூட்டுக்குள் கண்டு கொண்டிருந்த கனவுகளும் நம்பிக்கைகளும் கீழே நீர்த்திவலை களாக சிதறிக் கிடக்கின்றன.

மிஷ்மி கைகள் பரபரக்கின்றன, அவளின் தோளைப் பற்றி ஆறுதல் சொல்ல. என்னை எழுப்பவே யாரோ தேவைப் படுகிறது போல் இருக்கிறது. இரங்கிய பார்வையுடன் அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன்.

என் பார்வையைப் பற்றி அவள் அக்கறை காட்டவில்லை. இன்னும் புலம்புகிறாள். இறக்கும் தறுவாயில் இருக்கும் குப்பி விளக்கை வெறித்துப் பார்க்கிறாள். வாய் ஏதோவெல்லாம் முணுமுணுக்கிறது.

எனக்குக் கேட்கவில்லை. கேட்பதையும் நான் விரும்பவில்லை. அவள் கையில் கசக்கப்பட்ட அக் கடிதம் கோபந் தாங்கியாகச் சுருண்டு கிடக்கிறது. அது வெறும் கடிதம் அல்ல. இரண்டு உயிர்களின் இதயத்துடிப்பை ஒரே நேரத்தில் ஒரு நிமிடம் நிறுத்தி வைத்த யமதூதன்! வித்தைத் தடவி வந்த வெள்ளைப் பேப்பர் மனிதம் மலிந்திருந்த என் மகனின் முகத்தில் மரணத்தடம் பதித்து உருக்காட்டிய ஒரு விகற்ப ஓவியன். அவளையே பார்த்திருந்த போது என் கால்களை ஏதோ நக்கியது. பாம்போ என்று ஒரு கணம் பயந்து விட்டேன். ஒரு கணம் தான். மறுகணம் பாம்பு கடித்தாவது சாகக் கூடாதா என்று எண்ணம் தோன்றியது. நான் வளர்க்கும் நாய் என் கால்களை நக்கிக் கொண்டிருந்தது. இரவு சாப்பிடவில்லை என்பதை நக்கிச் சொல்கிறது போலும், இனிமேல் எமது சாப்பாடு சாப்பாடாக இருக்க மாட்டாது என்பதை நான் யாரிடம் சொல்வேன். எப்படிச் சொல்வேன்.

என்னையறியாமல் என்கைகள் நாயின் கழுத்தைத் தடவியது. மனம் மனைவியை நினைத்துக் கொண்டது, மகனை நினைத்துக் கொண்டது. என் கைவிரலைப் பிடித்துக் கொண்டு கடைத்தெருவைச் சுற்றிவரும் என்மகனின் பிஞ்சுமுகம் தெரிகிறது. நேற்றையது, நாளையது எல்லாமே நிகழ்வது போல் நினைவுகளில் ஒரு தடம் புரள்தல் நிகழ்ந்து கொண்டிருந்தது, என்மகனின் வெற்றிச்சான்றுகள் இங்கே தாறுமாறாக வீசப் பட்டுக்கிடப்பதைப் போல். என் தோள்கள் வலித்தன – அதில் அவன் சவாரி செய்ததால், என் கண்கள் பனித்தன – அது அவனை அடிக்கடி விழுங்கிக் கொண்டதால், என் மனம் ? அது என்ன செய்து கொண்டிருந்தது என்று எனக்கே தெரியாது. மலேரியாக் குளிசை விழுங்கியவன் போல் நான். நானே இப்படியென்றால் என் மனைவியைக் கேட்கத் தேவையில்லை.

டொக்.டொக்.டொக் நாய்களின் குரைப்புகளுக்கு மத்தியிலே ஜீப் ஒன்றின் உறுமல் வீட்டுவாசலில் அடங்கிய சில நிமிடங்களில் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறக்கிறேன். துப்பாக்கியின் வழிகாட்டலில் சிலர் என் வீட்டினுள் பிரவேசித்தார்கள். வேறு சந்தர்ப்பங்களில் என்றால் நான் வெலவெலத்துப் போயிருப்பேன். இப்போது எதுவுமே நடக்காதது போல் என்மனம் சுத்தசுன்யமாய் விறைத்துக் கிடந்தது. ‘எங்கே உனது மகன்’

மனித உருத்துப்பாக்கியொன்று இரைந்தது, ‘நான் பரமசிவம்’. நான் என்ன சொன்னேன் என்று தெரியவில்லை. ஆனால் பதில் சொன்னேன்.

‘நான் உன்னைப் பற்றிக் கேட்கவில்லை. உன் மகனை பற்றிக் கேட்கிறேன்’ துப்பாக்கியுருவின் இரைச்சலின் கடுமை இமயத்தைத் தொட்டது எங்கோ பரவியிருந்த இன்னும் சில துப்பாக்கிகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. கண்கள் மிரட்டலில் கைதேர்ந்தவை போல் என்னை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தன. ‘நானும் மரணத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. மனிதத்தைப் புற்றித்தான் கதைக்கிறேன்.’ ‘ஏய் கிழவா உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? ஏன் சம்பந்தமில்லாமல் பேசுகின்றாய்’ என் பதில் என்னைப் பற்றி ஒரு வித்தியாசமான அபிப்பிராயத்தை அவன் மனதில் உருவாக்கியிருக்க வேண்டும். அவனின் பேச்சில் இப்போது கடுமையுடன் ஒருவித இரக்க உணர்வும் இழையோடிக் கிடந்தது. ’நானும் உன்னிடம் கேட்கிறேன் பந்தத்தை அறுத்துவிட்டு சம்புந்தத்தைப் பற்றிக் கேட்கிறாயே உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? காயம் பட்ட என்மனதில் சிறைபட்டுக் கிடக்கும் என்கவலைகளை இவன் எப்படி அறிந்திருப்பான் என்று சிறிதும் எண்ணாமல் நான் என்பாட்டில் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். என்னைக் கேள்வி கேட்டவன் என் அருகாமையில் வந்தான். அவன் மூச்சுக்காற்று என்மேனியில் பட்டு ஒருவிதக் கூச்சத்தைக் கொடுத்தது. காற்று இந்தப் பாவப்பட்ட சுவாசங்களையெல்லாம் எப்படித்தான் சமாளிக்கின்றதோ? ‘வாயைத் திற’ அவன் கட்டளையிட்டான், ‘அதிசயமாக இருக்கிறதே எங்கள் வாயைத் திறக்கச் சொல்வது. அடைப்பதுதானே உங்களின் வழக்கம்.’ என்பதிலில் இருந்த கேலியும் அதன் ஆழமும் அவனுக்கு விளங்கவில்லையோ இல்லை விளங்காத மாதிரி நடித்தானோ தெரியாது, என் பதிலைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவன் போல், ’நீ குடித்திருக்கிறாயா? என்று கேட்டான். ’குடித்திருந்தால் நிதானமாய்ப் பேசியிருப்பேன்

அதன் பின் அவன் என்னிடம் எதுவுமே பேசவில்லை. என்னைப் பார்க்க விரும்பாதவன் போல் என்னுடன் பேசவிரும்பாதவன் போல் என்மனைவியின் பக்கம் சென்றான். இவனின் வரவைப்பற்றி எந்தவொரு உணர்வையும் வெளிக்காட்டாதபடி என் மனைவி புலம்பிக் கொண்டேயிருக்கிறாள்.

எங்கே உன் மகன்’ என்னிடம் அனுப்பப்பட்ட மிரட்டல் பந்து இப்போது என்மனைவியின் பக்கம் திசைதிருப்பப்பட்டது. இவன் யாரிடமோ கேட்டது போல் அவள் மௌனமாய் இருந்தாள். ‘ஏய் கிழவி உன்னிடம்தான் கேட்கிறேன். எங்கே உனது மகன்’ துப்பாக்கியுருவின் வார்த்தைகள் இப்போதுதான் என் மனைவியின் காதில் விழுந்திருக்க வேண்டும். நிமிர்ந்து ஒருதரம் அவனைத் தீர்க்கமாய் பார்த்தாள். பார்வையில் இருந்தது பயமா, கோபமா இல்லை உணர்வுகளைத்தாண்டிப்போனவெறுமையா அது அவளுக்கு மட்டும் தெரிந்த சங்கதி.

’சொல்லு எங்கே உன் மகன்’

’அங்கே இருக்கின்றான்’

என் மனைவியின் விரல் காட்டிய திசையில் என் வீட்டின் பூஜையறையி ருந்தது. என்னைச் சூழ்ந்திருந்த துப்பாக்கியுருக்கள் எல்லாம் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்சைப் போல் ஒருவித மகிழ்ச்சி கலந்த பரபரப்புடன் என் பூஜையறைக் கதவைத் திறந்தார்கள். உள்ளே இருந்தவையெல்லாம் தெய்வ உருக்களே. என்னை மிரட்டிய துப்பாக்கி முகம் பேயறைந்தது போல் தொங்கிப் போனது. ஓடிவந்து என் மனைவியின் கால்க ளைப் பிடித்துக் கொண்டான். ‘அம்மா என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன்’

எனக்கு ஆச்சரியம். எப்படியிந்த அதிசயம் நடந்தது. திருடன் நெஞ்சிலும் ஈரம் இருப்பதைப் போல் முரடன் நெஞ்சிலும் பாசம் இருப்பதைப் போல் இவர்களுக்கு எப்படி மனிதம் புரிய வைக்கப்பட்டது? யார் புரிய வைத்தார்கள்? நான் ஆச்சரியத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் போதே வெளியே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒலி மிக அருகில் கேட்டது. என் மனைவியைச் சூழ்ந்திருந்த துப்பாக்கிகள் எல்லாம் ஒவ்வொரு திசையில் பதுங்கிக் கொண்டன. என்னை மிரட்டியவன் என்னிடம் வந்து, ‘பெரியவரே இங்கே நிற்க வேண்டாம் எப்படியாவது நழுவி ஓடிவிடுங்கள்’ காதில் குசுகுசுத்து விட்டு ஒரு மூலையாய்ப் பார்த்து ஓடிப் போனான். நான் மனைவியைத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவொரு முயற்சியும் செய்வதாக தெரியவில்லை என்னைப் பார்த்து மட்டும் ஏதோ கையசைத்தாள். என்னை அழைக்கின்றாளா? இல்லை என்னை ஓடிப் போகச் சொல்கிறாளா? கை அசையும் திசையைப் பார்த்தால் என்னை ஓடிப்போகச் சொல்வது போல தான் இருக்கிறது. ’ஓடுங்கள்! ஓடுங்கள்’ என்பது போல் சத்தம் இல்லாத உச்சரிப்புகளின் அசைவு தெரிகிறது. அவள் விழிகளில் ஓர் ஏக்க உணர்வு தெரிகிறது. ‘நீங்களாவது தப்புங்களேன்’ என்ற கெஞ்சல் தெரிகிறது. அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் வீட்டுக் கூரையில் ஒடு ஒன்று உடைந்து துண்டு ஒன்று என் காலடியில் விழுந்தது. வெளியே சத்தங்கள் குறைவது போலவும் பின் திடீரென கூடுவது போலவும் ஒரு பிரமை,

‘ஒடு!ஒடு.!என் உள்மனம் ஓலமிடுகிறது. நான் ஓடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். என் மனைவிக்கு ஆறுதல் சொல்ல, அவள் துன்பக் கடலினுள் முழுவதும் மூழ்கிப் போகுமுன்கரை சேர்க்க ஓடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். பின்வாசல் கதவைத் திறந்து கொண்டு அசுர வேகத்தில் ஓடுகின்றேன். சாபமிட்டுத் துரத்தும் நாகங்கள் போல் என்னைத் தொடரும் ரவைகள், கை, கால், தலை, முதுகு, முதுகுத்தண்டு எங்கும் ஒரே குறுகுறுப்பு. எதுவும் காயப்படலாம். எந்தவேளையும் காயப்படலாம். வலது காலில் முள்ளோ எதுவோ ஒன்று குத்தியது. வலியைப் பார்க்கும் போது குத்தியது கள்ளி முள்ளாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. இங்கே எப்போது கள்ளி முளைத்தது? அது எப்போதோ முளைத்துத் தான் இருக்கிறது. காலை வைத்தது என் தவறுதான். வலியையும் பொருட்படுத்தாது ஓடுகிறேன். கோழியின் எச்சம் போல் எதோ ஒன்று என்பாதத்தில் அப்பியிருப்பதை உணர்கிறேன். புரிந்து கொண்டேன். என்பாதத்தில் இருந்து குருதி கொட்டப்பட்டிருக்கின்றது. அந்தக் குருதியில் மண் ஒட்டப்பட்டிருக்கின்றது. அது தான் அங்கே கோழியின் எச்சம்போல.

மாஸ்ரர் மாஸ்ரர். மிகவும் குறைந்த ஸ்தாயியில் ஒரு குரல் என்னை அழைப்பது போல் இருக்கிறது. காதலனின் ரகசிய அழைப்பில் மருண்டு போய் வெருண்டு போய் பார்க்கும் காதலி போல சத்தம் வந்த திசையில் என் பார்வை திரும்பியது. அங்கே தாடியினுள் புதையுண்டு போன ஒரு கறுப்பு உருவம் ஆபிரகாம் லிங்கனை நினைவுபடுத்துவது போல் ஒரு வரட்டுச் சிரிப்புடன் என்னைக் கைகாட்டி அழைத்தது. பற்களை மட்டும் இலக்காகக் கொண்டு நான் நடக்கிறேன். அந்த உரு அணிந்திருக்கும் உடையும் கறுப்பாகத்தான் இருக்க வேண்டும். ‘பளிச் செனத் தெரியும் பற்களைப் போல் சில வெள்ளைப் பொத்தான்களும் தெரிகிறது. நான் நெருங்க நெருங்க என்னை அழைத்த உருவத்தின்முகம் கொஞ்சம் கொஞ்சமாய் தெரிகிறது. எங்கோ பார்த்திருக்கிறாய்! பார்த்திருக்கிறாய்!’ மனம் நச்சரித்தது. எங்கேயென்று தெரியவில்லை. முடிந்தவரை உறங்கிக் கிடந்த என் ஞாபகப்படுத்தலைத் தட்டியெழுப்பினேன். என் வாழ்க்கைப் புத்தகத்தை அவசர அவசரமாய்ப் புரட்டிப் பார்த்தேன் தோல்விதான் எஞ்சியது. ‘என்ன மாஸ்ரர் என்னைத் தெரியவில்லையா, நான் உங்கட ரமேஷின் சினேகிதன்’ மர்ம உரு என்னிடம் நம்பிக்கையை வளர்ப்பதற்காக தன்னை முந்திக் கொண்டே அறிமுகம் செய்தது. நான் எதுவும் பேசவில்லை. எதைப் பேசுவேன்? உன்னைப் பார்த்திருக்கிறேன் எங்கேயென்று தெரியவில்லை என்று என் மறதியை ஒப்புக்கொள்வேனா? அல்லது, என் மகனின் நண்பன் என்கிறாயே, என் மகன் மரணித்தது உனக்குத் தெரியாதா என்று என் துக்கத்திற்கு தூசுதட்டுவேனா? ’நீங்க ஏன் பேசாமல் இருக்கிறியள் என்று தெரியும் மாஸ்ரர் ரமேஷின்ரை மறைவ எங்களாலேயே ஜீரணிக்க முடியல்ல. நீங்க எப்பிடி. ‘அவன் சொல்லி முடிக்கவில்லை. மௌனமானான். அந்த மௌனத்தினூடே அவனிடமிருந்து விசும்பல் கேட்டது. அழுகிறானா?இவனுக்காகநாளை யார் அழுவார்களோ? நானே அழக் கூடும். எனக்காகவும் இவன் அழக்கூடும். பாம்பைக் கழுத்தில் சுற்றிநிற்பவன் சின்னக் கரப்பானுக்குப் பயப்படுவதுபோல் இவன் மரணத்திற்காக அழுகிறானா?

‘மாஸ்ரர்.’ ‘அப்படிக் கூப்பிடாத மகன், என்ர மகன் கூப்பிட்ட மாதிரியே நீயும் ’அப்பு’ எண்டே கூப்பிடு’ ஏதோ சொல்ல எடுத்தவனை நான் தடுத்து விட்டேன்.

‘சரி! அப்பு ஒரு இடமும் போயிராதீங்கோ, அங்க ஏதோ பிரச்சினை போலிருக்கு. இங்கஇந்த மரத்துக்கு மறைவில படுத்துக் கொள்ளுங்கோ அவன் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான். அங்கே ஒரு தென்னங்கிடுகு பாயாக, மடிக்கப்பட்ட சாக்கு தலையணையாக ஒரு படுக்கை உருவாக்கப்பட்டிருந்தது. இதுவரை அவன் அதில் படுத்திருப்பான் போலும், ஓடிவந்த உடல் சோர்வும் மகனைப் பற்றிய, மனைவியைப் பற்றிய மனச் சோர்வும் எனக்கு ஒரு ஓய்வு தேவையென்பதை நடைமுறையாக்கியது. நான் அந்தப்படுக்கையில் சாய முற்பட்ட போது அந்த மனிதன் சட்டைப்பையினுள் இருந்து எதையோ எடுத்து என் கைகளில் திணித்தான். அப்பு! இது கவிதை! உங்கள் ரமேஷ் எழுதிய கவிதை என் நண்பன் எழுதிய கடைசிக் கவிதை’ தழுதழுத்த குரலினூடு சொல்லிவிட்டு ஒரு சிறிய ரோச்’சைத் தந்தான் படிப்பதற்காக, நான் படித்தேன், அந்தச் சிறிய வெளிச்சத்திலே, எட்டு வரிகளிலே நிகழ்கால நிஜங்களை கோடு போட்டுக் காட்டியிருந்தான். ஒருதரம், இருதரம், மூன்றுதரம். பலதரம் வாசித்தேன். வாசிக்க வாசிக்க என் மகனைப் பற்றி, என் மகனைப் பெற்றதால் என்னைப் பற்றிநானே பெருமிதம் அடைந்தேன்.

மனிதம் தேடிய
நான் சோர்ந்துபோய்
எலும்புகளில் தடுக்கி
விழுந்தேன்.
விழித்த போது
என்கையிலும்

துப்பாக்கி நான் கவிதையைக் கையில் வைத்திருந்த போதே அந்த இருட்டு மனிதன் அதை உரக்கச் சொன்னான். படித்துப் படித்து மனப்பாடம் செய்திருப்பான் போலும்,

‘படிர் படீர். டொம்’

எங்கோ இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று எங்களின் அருகாமையில் விழுந்து வெடித்தது. அப்பு கவனமாய்ப் படுங்கோ’ சொல்லி விட்டு இருட்டு உரு எங்கோ ஓடத் தொடங்கியது. காரசாரமான சத்தங்கள் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தன. குருஷேத்திரம் தொடங்கி விட்டது போலும், ஆம்! அது குருஷேத்திரம் தான். த்திரியர்களே சந்திக்காத குருஷேத்திரம். அப்படியானால் இங்கே காண்டீபன் யார்?

கீகர்ணன் யார்? துரியோதனன் யார்? என்னை மிரட்டிய உரு துரியோதனனா? இந்த மர்ம உரு காண்டீபனா? என் மகன் தருமனா? இல்லை! இவர்கள் எம்மவர்கள். ஒரே கூட்டினுள் வாழ வேண்டிய பறவைக் குஞ்சுகள். அப்படியானால் ஏன் இவர்கள் கொத்திக் கொள்கிறார்கள். யாரோ கல்லெறிந்து விட்டார்கள், பேதம் பூசிய கல் எறிந்து விட்டார்கள். நான் எல்லோரையும் நேசிக்கிறேன் – என்மகனைப் போல, என்மனம் ஏதோவெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கண்கள் செருகத் தொடங்குகின்றன. சரிகின்றேன். நான் எவ்வளவு நேரம் உறங்கியிருப்பேனோ தெரியாது. கோழி கூவிய சத்தமும் பறவைகளின் இரைச்சலும் என் தூக்கத்தைக் கெடுத்து விட்டன. இன்னும் இமைகள் திறக்காத நிலையில் அப்படியே படுக்கின்றேன். அருகில் யாரோ மூச்சுவிடும் சத்தம் கேட்கிறது. ‘இருட்டு மனிதனாக இருக்குமோ’ நினைத்துக் கொண்டே விழிகளைத் திறக்கிறேன். என்பக்கத்தில் என்மகன் ரமேஷ் படுத்திருக்கிறான். நான் என்வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியென்றால் அந்தக் கடிதம், மிரட்டல் மனிதன், இருட்டு உரு, ஜீப்பின் ஒலி, குருஷேத்திரம், அந்தக் கவிதை, கிடுகுப் படுக்கை, கள்ளிமுள் எல்லாமே கனவுகளா? எனக்கு வியர்த்துக் கொட்டியது. என்னையே நம்பாதவன் போல் என் மனைவியைப் பார்க்கிறேன். அவள் எதுவுமே நடக்காது போல் அமைதியாக சயனித்துக் கொண்டிருந்தாள். இன்னும் குழப்பம் தீராத நிலையில் ஜீப்பின் தடமாவது இருக்கின்றதா என்பதைப் பார்க்க வாசலுக்கு விரைகிறேன். அங்கே எந்த ஜிப்பும் வந்ததற்கான தடயங்கள் இருக்கவில்லை. நிமிர்ந்து வீதியைப் பார்க்கிறேன். எதிரேயுள்ள மதில் சுவரில் அந்த இருட்டு மனிதன் சிரித்துக் கொண்டிருந்தான் சுவரொட்டியாக, ’இவனை எங்கோ பார்த்திருக்கின்றோம் என்றது இங்கேதானா? உள்ளே வருகின்றேன். என்மகன் தூங்கிக் கொண்டிருக்கின்றான். அவனின் நெஞ்சு அமைதியாக மேலும் கீழும் அசைகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அது கனவாகவே இருக்கட்டும் என்று மனம் இரைகிறது.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# நேர்காணல்

**எங்களுடைய அடையாளம் நாம் செய்யும் சாதனைகள் தான். துறை எதுவாக இருந்தாலும் எமது 100% முயற்சியினை பிரயோகிக்க வேண்டும்.**



**நேர்கண்டவர் - திருமலை தட்சா**

## Aji Bridal and Beauty salon அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் அஜந்தா கமலேசன் உடனான நேர்காணல்.

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

நான் திருமதி. அஜந்தா கமலேசன். திருகோணமலை மாவட்டத்தில் **Aji Bridal and Beauty salon** எனும் பெயரில் அழகு நிலையத்தினை **NVQ Level** 4இனை பெற்றுக் கொண்ட பின்னர் தனித்து அழகு நிலையத்தினை 2018ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்று வரை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றேன்.

**02) அழகுக் கலைத்துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

கலைத்துறையில் என்னுடைய ஆர்வம் சிறு வயதிலே ஆரம்பித்து விட்டது. அதற்குக் காரணம் என்னுடைய தாயார். அவருக்கு நான் கலைத்துறை சார்ந்த கல்வியில் ஈடுபட வேண்டுமென்ற ஆசை இருந்தது. அதனால் என்னை கலைகளுடன் தொடர்புடைய கல்வியை கற்க வேண்டுமெனவும், கைத்தொழில் என்றுமே கை கொடுக்குமெனவும் அடிக்கடி கூறிக்கொண்டே இருப்பார். அதன் நிமித்தம் எனக்குள்ளும் கலைத்துறையில் ஆர்வம் ஏற்பட்டு உயர்தரக் கல்வியை முடித்த பின் அழகுக் கலைத்துறையை தேர்ந்தெடுத்து பயின்றேன். கைத்தொழில் என்றுமே கை கொடுக்குமென்று எனது தாய் கூறியமை போல நான் பல துறைகளிலும் கல்வி கற்று தொழில் செய்ய முயன்றாலும் இறுதியில் எனக்கு கை கொடுத்தது நான் கற்ற அழகுக் கலைத் தொழிலே. என்னைப் பொறுத்தவரை எதை செய்தாலும் அதில் எமது 100./. முயற்சியினை கொடுக்க வேண்டும். எனவே தற்போது என்னுடைய துறையை மிகுந்த ஆர்வத்துடனும், முயற்சியுடனும் மென்மேலும் முன்னெடுத்து பயணித்துச் செல்கின்றேன்.

**03) உங்களது அழகுக் கலை நிலையம் பற்றியும் அதன் சேவைகள் பற்றியும்?**

2018ம் ஆண்டு முதல் இன்று வரை 4வருடங்களாக **Aji Bridal & Beauty Salon** என்ற பெயரில் எனது அழகுக்கலை நிலையத்தினை திருக்கோணமலை மாவட்டத்தில் நடாத்தி வருகின்றேன். எனது அழகுக்கலை நிலையத்தில் சருமப் பராமரிப்பு, கூந்தல் பராமரிப்பு மற்றும் மணப்பெண் அலங்காரம் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றேன்.

**04) இத் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி?**

சவால்கள் அற்ற துறையே இல்லை என்று சொல்ல வேண்டும். அவ் வகையில், எனக்கும் இன்றுவரை துறைசார் சவால்கள் இருந்து வருகின்றன. ஆரம்பத்தில் எனக்கு மூலதனமே மிகப் பிரதானமான சவாலாக காணப்பட்டது. சிறிய மூலதனத்துடன் தொழில் ஆரம்பிக்க முடியும் ஆனால் முன்னேற வேண்டுமானால் அதற்கு பாரிய ஒரு முதலீடு தேவைப்பட்டது. அடுத்து தொழில்சார் போட்டித் தன்மை. சகல துறைகளிலும் ஆரோக்கியமான ஒரு போட்டித்தன்மை இருக்க வேண்டியது நன்மை தான். இவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து எனது அழகுக் கலைத்துறையை முன்னெடுத்துச் செல்கின்றேன்.

**05) இத்துறையில் நீங்கள் அடைந்த சாதனைகள் பற்றி?**

சாதனைகள் என்று சொல்லும் அளவிற்கு நான் பெரிதாக இன்று வரை எதையும் செய்து விடவில்லை.



தற்போது தான் என்னுடைய தடத்தினை இத்துறையில் பலமாக பதிக்க ஆரம்பித்து இருக்கின்றேன். வருங்காலத்தில் சாதனைகள் புரிய வேண்டுமென்பதே எனது நோக்கம்.

**06) இன்று பல பெண்களுக்கும் முகப்பரு, கருவளையம் போன்ற பிரச்சினைகள் பெரும் பிரச்சினைகளாக கருதப்படுகின்றன. அது குறித்தும், அவற்றிக்கான தீர்வு பற்றியும்?**

என்னைப் பொறுத்த வரையில் ஒவ்வொருவர் சருமமும் ஒவ்வொரு விதம். சருமம் தொடர்பான பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அது தனிப்பட்ட நபர்களின் பிரச்சினையை கண்டறிந்து அதற்கேற்ப தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதே சிறந்தது. அதை விடுத்து ஏதோ ஓர் கிறீம் வகைகளையோ, மருந்துகளையோ பொதுவாகப் பயன்படுத்துவது நன்மையளிக்காது. பொதுவாக கூற வேண்டிய ஆலோசனை என்றால் முகப்பரு உடையவர்கள் தங்களுடைய சருமத்தினை முறையாக, சுத்தமாக வைத்திருப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். Face wash & cleancer மற்றும் Toner பயன்படுத்தி சுத்தம் செய்து எப்போதும் சருமத்திற்கு புத்துணர்ச்சியை கொடுக்கும் வகையில் வைத்துக் கொள்ளுங்கள். கருவளையம் உடையவர்கள் முடிந்தளவில் உங்கள் கண்களுக்கு ஓய்வு கொடுத்து சரியான தூக்கத்திற்கான வழிவகைகளை செய்வதோடு அதற்குரிய முறையான சிகிச்சைகளை பெறுவதன் மூலம் இவ் பிரச்சினைகளுக்குரிய தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும்.

**07) அழகுத்துறை தவிர வேறு துறைகளில் உங்களது நாட்டம் பற்றி?**

எனக்கு சிறுவயது முதலே பரதத் துறையில் நாட்டம் அதிகமாகவே இருந்தது. பாடசாலைக் காலங்களில் பரதக் கலையை கற்றேன். பல நடனப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றிருக்கின்றேன். இதைத் தவிர பாடல், ஓவியம் வரைதல் எனது பொழுதுபோக்கு ஆகும்.

**08) திருகோணமலை மாவட்டத்தில் அழகுக் கலைத்துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்தில் அழகுக்கலை தொடர்பான பார்வை பரந்து பட்டது. அழகுக்கலை சேவையினை அதிகளவானோர் நாட ஆரம்பித்துள்ளனர். அழகுக்கலைக் கல்வியினை பெண்கள் ஆர்வத்துடன் சுதந்திரமாக விரும்பிக் கற்கின்றனர். அழகுக் கலைஞர்கள் தொடர்பான பார்வையும் நேர்த்தியான கோணங்களில் மாறுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

**09) தற்காலத்தில் பல பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ள பல வகை கிறீம்களை உபயோகித்து வருகின்றனர் அது குறித்து உங்களின் கருத்து?**

முதலில் உங்களை நீங்கள் நேசியுங்கள். உங்கள் சரும நிறத்தினை நேசியுங்கள். எப்போதுமே ஆரோக்கியத்துடன் கூடிய அழகினை வரவேற்றுக் கொள்ளுங்கள். பக்க விளைவுகளுடன் கூடிய அழகு பயனற்றது. உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியத்துடன் கூடிய அழகைக் கொடுக்கும் கிறீம் உற்பத்தி வகைகளை ஆலோசனையுடன் பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது.

**10) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

என்னைப் பொறுத்த வரையில், பெண்கள் எங்களுக்கான அடையாளங்களை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். எங்களுடைய அடையாளம் நாம் செய்யும் சாதனைகள் தான். துறை எதுவாக இருந்தாலும் எமது 100% முயற்சியினை பிரயோகிக்க வேண்டும். வெற்றி, தோல்வி என்பதைக் காட்டிலும் சிறப்பான செயல் என்பதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். ஆயிரம் நபர்கள் நீங்கள் செய்வதைத் தவறு எனக் கூறினாலும் நீங்கள் சரியானதை தெளிந்து, தெரிந்து, மனநிறைவோடு செய்யுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும். சாதனைகள் பெருகும். வாழ்த்துக்கள் குவியும்.

**நன்றி!**

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir




# மனித செயற்பாடுகளும் சூழலில் அதன் தாக்கங்களும்

- கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா -
(சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

## அறிமுகம்


இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், மற்றும் சுற்றுப்புறச் சூழலை பேண வேண்டும் என்ற விழிப்புணர்வை உலக மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உலக சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதர்கள், தன்னார்வ நிறுவனங்கள், பிரபலங்கள் மற்றும் எல்லா மக்கள் சமூகங்கள் ஆகிய அனைவரும் உலகச் சுற்றுப்புறச் சூழலைப் பேணுவதற்கான முழுமையான செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்று இந்த நாள் அழைப்பு விடுக்கிறது. இப்போது இருக்கும் இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மிக எளிதாகப் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்திகளைப் பரப்ப முடியும். சுற்றுச்சூழலைக் காக்க இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் முன்வர வேண்டும். மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையின் மொத்த அம்சங்கள் 'சூழல்' எனப்படும். நாள்தோறும் நாம் காணுகின்ற, எம்மைச் சுற்றியுள்ள சகல அம்சங்களையும் சூழல் என்பது குறித்து நிற்கும். சூழல் என்னும் விடயத்தில் சூழலியல், சூழல், சூழற்றொகுதி போன்ற சொற்பதங்கள் முக்கியமானவை. உயிரினத் தோற்றத்திற்கும், நிறைவேற்றுத் தன்மைக்கும் சூழலமைப்பே காரணமாகும். இச்சூழல் இரண்டு வகைப்படும். அவை பௌதிகச் சூழல் அல்லது இயற்கைச் சூழல் மற்றும் பண்பாட்டுச் சூழல் அல்லது மனிதனால் உருவாக்கப்படும் சூழல் ஆகியவையாகும்.

## சூழலின் முக்கியத்துவம்

இயற்கையும், சுற்றுச்சூழலையும் மனித இனத்தின் சுகவாழ்விற்கு பயன்படுத்தல் என்ற செயற்பாடானது தற்போது முக்கியமான ஒரு விடயமாக மாறி வருகின்றது. இது அபிவிருத்தி என அழைக்கப்படுகின்றது. இயற்கை வளங்களையும், சுற்றுச் சூழலையும் எந்த தேவைக்கும் பயன்படுத்தும் போதும் சூழலியல் மற்றும் சுற்றுச் சூழலியல் ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களுக்கு அமைவாகவே செயற்பட வேண்டும். தற்காலத்தில் அபிவிருத்தி பற்றிப் பேசப்படும் போதெல்லாம் சுற்றுச்சூழல் மிகவும் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. இந்த விடயத்தில் உள்ள சிக்கல் தன்மை, பாதகத்தன்மை மற்றும் இதன் முக்கியத்துவம் ஆகிய அனைத்தும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுக்கின்றன. சுற்றுச்சூழல் என்ற விடயத்திற்கும், அபிருத்திக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றதாகவும், விளங்கிக் கொள்வதற்கு கடினமானதாகவும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் மனிதன் சுற்றுச்சூழலின் இயற்கைச் சமனிலையைப் பற்றி பூரணமாக அறியாமல் இருப்பதாகும். அண்மைக் காலங்களில் விஞ்ஞானத்துறையானது மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும் எம்மால் சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அறிவை இன்னும் பூரணமாக பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல இந்த அறிவை வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றினைப் பேணுதல் போன்றவற்றிலும் அபிவிருத்தி, நின்று நிலைக்கும் பயன்பாடு போன்றவற்றிலும் கூட எம்மால் பூரணமாக பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. உலகளாவிய ரீதியில் அநேக துறைகளில் இன்று சூழல் கல்வி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் அண்மைக்கால உலக சூழல் நெருக்கடியாகும்.

சர்வதேச சமூகத்தின் சூழல் பற்றிய ஈடுபாட்டை இனங்காண ஐக்கிய நாடுகள் சபையால் 1972ஆம் ஆண்டு ஸ்ரோக்ஹோம் நகரில் நடைபெற்ற சூழல் மகாநாட்டில் சுற்றுச்சூழலை ஒருங்கிணைப்பது பற்றிய விவாதங்கள் நிகழ்ந்தன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு பிரகடனப்படுத்தப்பட்ட முதலாவது உலக சுற்றுச்சூழல் தினமானது 'ஒரே ஒரு பூமி' எனும் கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து யூன் மாதம் ஐந்தாம் திகதி ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ஆய்வுப் பொருளை (Theme) அடிப்படையாகக் கொண்டு உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இவ்வருடத்திற்கான (2022) ஆய்வுப்பொருள் (Theme) முதலாவது உலக சுற்றுச்சூழல் தினத்திற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட 'ஒரே ஒரு பூமி' (Only One Earth) என்பதேயாகும். ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் உதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் 150இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன. இந்த ஆண்டு (2022) உலக சுற்றுச்சூழல் தினத்தை நடத்துவதற்கான தொகுப்பாளராக (Host) ஸ்வீடன் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே ஒரு பூமி என்ற கருப்பொருளின் கீழ் தூய்மையான மற்றும் பசுமையான வாழ்க்கை முறையை நோக்கிய நமது கொள்கைகள் மற்றும் தேர்வுகளில் உருமாறும் மாற்றங்கள் மூலம் இயற்கையோடு இணக்கமாக வாழ வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டும் வகையில் உலக சுற்றுச்சூழல் தினம் 2022 அனுசரிக்கப்படுகின்றது. 1972ஆம் ஆண்டு ஸ்ரோக்ஹோமில் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது சுற்றுச்சூழல் மாநாட்டில் இருந்து 2022ஆம் ஆண்டு 50 ஆவது ஆண்டு நிறைவினை (பொன் விழா) இவ்வருட சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுகின்றது.



## சூழல் மாசடைதல்

உலகளாவிய ரீதியில் நாடுகளை பொதுவாக அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என இரண்டாக வகைப்படுத்தலாம். இத்தகைய இரண்டு வகையான நாடுகளிலும் குடித்தொகை அதிகரிப்பு, நகராக்க விருத்தி, கைத்தொழில் மயமாக்கம் என்பன பொதுவாகக் காணப்படுகின்றன. குடித்தொகை அதிகரிப்பிற்கேற்ப தேவைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே மனிதன் தனது தேவைகளை நிவர்த்தி செய்ய முற்படும் போது அதன் விளைவாக பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளில் ஒன்றாகவே சூழல் மாசடைதல் காணப்படுகின்றது. இயற்கைச் சமநிலை ஏதாவது ஒரு காரணத்தால் குழப்பப்படும் போது அது சூழல் தொகுதியில் அல்லது சுற்றாடத் தொகுதியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். அந்த வகையில் சூழல் தொகுதியில் மனிதன் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும் விரும்பத்தகாத அல்லது பாதகமான பெரும்பாலும் மீள முடியாத விளைவுகள் சூழல் மாசடைதல் எனப்படும். அபிவிருத்தி நோக்கிய மனித நடத்தையினால் இன்று சூழல் அதிகளவில் மாசடைந்து வருகின்றது. மனிதர்களின் அலட்சியப் போக்குக் காரணமாக புவி தன் சமநிலையை இழந்து செல்கிறது. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள், கைத்தொழில் மயமாக்கல், நகர மயமாக்கல், குடித்தொகைப் பெருக்கம் ஆகிய காரணங்களால் சூழல் பலவகையாக மாசுபடுகின்றது. நச்சு வாயுக்களால் வளிமண்டலம் நிரம்பியுள்ளது. காடழிப்பினால் இயற்கை மழையைப் புவி இழந்துள்ளது. போர்ச் சூழலினாலும், அணுப் பரிசோதனைகளினாலும் அழிவுகளைப் புவி எதிர்நோக்குகிறது. இத்தனைக்கும் மனிதனின் அலட்சியப்போக்கும், சுயநலமுமே காரணமாக இருக்கின்றன. நகரங்களில் வசதிவாய்ப்புக்கள். அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக கிராமப்புற வசதிபடைத்த மக்கள் நகர்ப்பகுதிகளை நோக்கி இடம் பெயருகின்றனர். இதன் காரணமாக நகர்ப் பகுதிகளில் கிராமங்களை விட சூழல் மாசடைதல் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் சூழலில் உள்ள பல்வேறு கூறுகளும் அதாவது நிலம், நீர், வளி ஆகிய கூறுகள் மனிதனுடைய பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மாசடைகின்றன.

இந்த வகையில் நீர் மாசடைதலை நோக்குவோமாயின் தொழிற்சாலைக் கழிவுகள் நீருடன் கலத்தல், விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் நீர் நிலைகளுடன் கலத்தல், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிரிக் போன்றவற்றை நீர் நிலைகளில் இடுதல், தொழிற்சாலைகளில் வெளியேறும் இரசாயனப்பதார்த்தங்கள் மற்றும் கழிவு நீர் என்பன நீர் நிலைகளில் விடுவிக்கப்படல், நகர்ப்புற குப்பை கூழங்கள், கழிவுநீர் என்பவற்றை ஆறுகள், கால்வாய்கள் என்பவற்றுள் விடுவித்தல், நீர் நிலைகளில் பல்வேறு பொருள்களை கழுவுதலும், குளித்தலும், கால்நடைகளை நீர் நிலைகளில் குளிப்பாட்டுதல், மலசலகூட கழிவுகள் நீருடன் கலத்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாக நிலம் மாசடைதலை நோக்குவோமாயின் பிளாஸ்டிரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை நிலத்தில்புதைத்தல், காடழித்தல், உக்காத பொருள்களை நிலத்தினுள் புதைத்தல் (கண்ணாடி, பீங்கான் ஓடுகள்), தொழிற்சாலை எண்ணெய்க் கழிவுகளை நிலத்தினுள் செலுத்துதல், அளவிற்கு அதிகமான செயற்கை இரசாயன உரங்களையும் கிருமிநாசினிகளையும் விவசாயத்தின் போது பயன்படுத்துதல், பல அடுக்கு மாடிக்கட்டடங்களை கட்டுதல், ஆற்றுக் கழிமுகங்களில் மண் அகழ்தல், பல அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாக வளி (காற்று) மாசடைதலை நோக்குவோமாயின் தொழிற்சாலை புகைகள் வளியில் கலத்தல், நச்சுவாயுக்கள் வளியினுள் கலத்தல், கிருமிநாசினிகள் விசிறும் போது அவை வளியில் கலத்தல், வெடிபொருள்களின் நச்சு வாயுக்கள் வளியில் கலத்தல், பழைய வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை வளிமண்டலத்தில் கலத்தல், யுத்தங்கள் நடைபெறுகின்ற போது நவீன ஆயுதங்களின் பயன்பாட்டால் நச்சுப்புகைகள் வளிமண்டலத்தில் கலத்தல், எரிமலை வெடிப்பினால் ஏற்படும் புகை, தூசு போன்ற காரணிகளால் வளி மாசடைகின்றது. அதுமட்டுமன்றி அணுஆயுதத் தாக்குதல்கள் காரணமாக பெருமளவில் வளிமாசடைகின்றது. ஏவுகணைகளை வானத்தில் ஏவுவதாலும், காட்டுத் தீபரவும் சந்தர்ப்பங்களிலும், நாம் விறகை எரித்துப் பயன் பெறும் போதும் அதிகளவு புகை வளிமண்டலத்தைச் சென்றடைகின்றமை போன்ற செயற்பாடுகளினாலும் வளி மாசடைகின்றது. இதனால் ஓசோன் படை சிதைவடைதல், பச்சை வீட்டுத்தாக்கம், அமில மழை, தீய கதிர்வீச்சு போன்ற பல தீயவிளைவுகள் ஏற்படுகின்றன.

(15ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir



# மனித செயற்பாடுகளும் .....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பூகோள சுற்றாடல் பிரச்சினைகள்

உலகில் எல்லா உயிரினங்களும் வாழக்கூடிய ஒரே ஒரு கோள் புவியாகும். இந்தப் புவியில் இன்றைய மிதமிஞ்சிய குடித்தொகையும், அதன் எல்லையற்ற முயற்சியும், முக்கிய துறைகளின் வளர்ச்சியும் எல்லைக்கே சென்றுள்ளன. குறிப்பாக கைத்தொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, விஞ்ஞானம், தொழில் நுட்பம், தொலைத் தொடர்புகள், ஆயுத உற்பத்திகள் போன்றவை சூழலை ஆதாரமாக வைத்தே அவற்றின் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இத்துறைகளின் எல்லையற்ற வளர்ச்சியினால் இன்று புவிக் கோளமானது உலகளாவிய ரீதியில் பல சூழல் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. முக்கியமான பிரச்சினைகள் பின்வருமாறு:

பச்சை வீட்டு விளைவும், பூகோள வெப்பமாதலும்
ஓசோன் படைத் தேய்வு
காடழிப்பும், உயிரினப் பல்வகைமை அழிவும்
பாலைவனமாதல்
அமில மழை

சீரற்ற காலநிலை நிலவும் குளிர் பிரதேசங்களில் தாவரங்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் கண்ணாடியிலான மூடிய அமைப்பு முறையே 'பச்சை வீடு' என அழைக்கப்படுகின்றது. பூமி அதிகளவில் வெப்பமடைவதால் 'பச்சை வீட்டு விளைவானது' நிகழ்கின்றது. இத்தாக்கம் பற்றி முதன் முதலில் 1827இல் Baron Jean Bastiste Fauriner என்பவரால் விவரிக்கப்பட்டது. இத்தாக்கமானது பூமியை வெப்பமாக்கும் காபனீரொட்சைட்டினதும், மெதேன், நைதரசன் ஒட்சைட்டு, ஓசோன், நீராவி, குளோரோபுளோரோ காபன்கள் ஆகியவற்றின் பொறிமுறை செயற்பாடாக காணப்படுகின்றது. கடந்த காலங்களில் மனித நடவடிக்கைகளினால் வெளிவிடப்படும் வாயுக்களின் பங்களிப்பினை மாற்றியமைப்பதோடு இவ்வாயுக்களின் செயற்பாட்டையும் பாதிக்கின்றது. இதனால் வளிமண்டலம், உயிர் மண்டலம், நீர் மண்டலம், நில மண்டலம் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இவ்வாயுக்களின் அதிகரிப்பினால் வெப்பநிலை அதிகரித்தல், மழைவீழ்ச்சி மாதிரியில் வேறுபாடு, காலநிலை மாற்றம், கடல் மட்ட உயர்வு, நீரியல் வட்டத்தில் பாதிப்பு, சூறாவளிகள், புயல்கள் போன்றவற்றின் உருவாக்கம், சமுத்திர நீரோட்டங்களின் திசை மாறுதல், தாவரங்கள், விலங்குகளில் ஏற்படும் தாக்கம் போன்றன ஏற்படுவதோடு மனிதனின் சமூக, பொருளாதார கட்டமைப்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. கோள வெப்ப அதிகரிப்புக் காரணமாக முனைவுப் பகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருகும் வேகம் படிப்படியாக அதிகரித்துள்ளது. ஆட்டிக், அந்தாட்டிக் பகுதிகளில் மட்டுமன்றி இமயமலையிலுள்ள பனிக்கவிப்புகளும் உருகத் தொடங்கி உள்ளன. 1999ஆம் ஆண்டுத் தகவலின் படி இமயத்தின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் பனி உருகி வழிந்ததில் அதன் உயரத்தில் 1.3 மீற்றர் குறைந்துள்ளது. இப்போது ஆண்டிற்கு சராசரியாக 0.1 மீற்றர் என்ற அளவில் பனி உருகிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் 2050ஆம் ஆண்டளவில் சீனாவிலுள்ள பனிமலைகளில் 65வீதம் உருகிவிடும். கோள வெப்ப அதிகரிப்பு காரணமாக பசி, பட்டினியாலும், மலேரியா, வயிற்றுப்போக்குப் போன்ற வெப்ப மண்டல நோய்களாலும் ஏழை நாடுகளில் ஆண்டுதோறும் ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமானோர் இறந்து வருகின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உயிரிழப்பு 2030ஆம் ஆண்டளவில் இரண்டு மடங்காக உயரும் என அஞ்சப்படுகிறது. இதில் அனுதாபதிற்குரிய விடயம் கோள வெப்ப உயர்வால் அதிகம் தண்டிக்கப்படும் இவர்கள் பூகோளத்தை வெப்பப் படுத்தும் செயல்கள் எதிலும் தொடர்புபடாத அப்பாவி ஏழைமக்கள் என்பதுதான். இக்கோள வெப்ப அதிகரிப்புக் காரணமாக ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளதோடு ஓசோன் படை தேய்வடைந்தும் செல்கின்றது. ஓசோன் படையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் வளர்ந்த, வளர்முக நாடுகளில் அமில மழை உருவாக்கம், பாலைவன பரவலாக்கம் என்பன அதிகரிக்கும்.

பூகோள சூழற் பிரச்சினைகளில் ஒன்றாக விளங்கும் அமிலமழையானது இன்றைய காலகட்டத்தில் சூழலை மாசடையச் செய்து மக்களை அச்சுறுத்தும் ஒரு நிகழ்வாகக் காணப்படுகிறது. இது 1980களின் பின்னரே தீவிரமடைந்த ஒரு நிகழ்வாகும். அமில மழை என்பது எரிபொருள் படிமங்களை எரிக்கும் போது உருவாக்கப்படும் சல்பரொக்சைட், நைதரசன் போன்ற பிரதான வாயுக்களை உள்ளடக்கிய மாசு பொருள்கள் இரசாயன மாற்றத்திற்கு உள்ளாகி அமிலத் தன்மையடைந்து வளிமண்டலத்தினூடாக எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் மழையாகப் பொழிதலைக் குறிக்கின்றது. இவ் அமிலமழைப் பொழிவினால் நீர்ச் சூழல்பாதிக்கப்படல், மண்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படல், மண்ணின் வளம் குறைவடைதல், மனித சுகாதாரம் பாதிக்கப்படல், கட்டடங்கள், ஓவியங்கள் பாதிக்கப்படல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

உயிர்ப்பல்வகைமை என்பதில் புவியில் காணப்படும் சகல விதமான உயிரினங்களும் அவற்றின் வாழ்விடங்களும் உள்ளடக்கப்படுகின்றன. இந்த வகையில் புவியில் 3 கோடி முதல் 10 கோடி வரையிலான அளவில் அங்கிகள் காணப்படலாம் என மதிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கிகளிடையே சுமார் 15 லட்சம் மாத்திரமே விஞ்ஞான ரீதியாக சிறப்பாக ஆராய்ந்தறிந்து பாகுபடுத்தப்பட்டுள்ளன. பூமியில் வாழும் மொத்த அங்கிகளில் 50 சதவீதமானவை அயன மண்டலத்தினுள் இனங்காணப்பட்டுள்ளன. அதேநேரம் இவ்வயனமண்டலக் காடுகள் வருடாந்தம் மனித நடவடிக்கைகளினால் ஒரு சதவீதம் என்ற அளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக அயன மண்டலத்தில் 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் உயிரினப் பல்வகைமையானது துரிதமாக அழிவிற்குட்பட்டு வருவது தெளிவாக இனங்காணப்பட்டதன் விளைவாக 1992ஆம் ஆண்டு உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கக் கூடிய விதத்தில் அவற்றைப் பயன்படுத்தல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைச் சூழல் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. இம்மாநாட்டில் 160றக்கும் மேற்பட்ட நாடுகள் உயிரின வளங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை நிலையான அடிப்படையில் பாதுகாப்பதற்கு உறுதி பூண்டுகையொப்பமிட்டன. உயிரினப் பல்வகைமையானது உயிரியல், பொருளாதார, கல்வி, கலாசார, மனோத்துவம், அழகியல் எனப் பல்வேறு விதங்களில் முக்கியம் பெறுகின்றது. எனினும் இவ்வுயிர்ப் பல்வகைமையானது மனிதனது நேரடியான தாக்கங்களிற்கு உட்பட்டு வருவதுடன் திட்டமிடப்படாத நிலப் பயன்பாடு, இயற்கை வளங்களின் அதிகரித்த பாவனை என்பன காரணமாகவும் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகிறது. மனிதன் உட்பட்ட சூழல் தொகுதியில் வாழ்கின்ற ஒவ்வொரு அங்கியும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டு ஒரு வலையமைப்பில் வாழ்ந்து வருகின்ற அதே நேரம் இவை ஒவ்வொன்றும் முக்கிய பங்களிப்புகளை அவற்றின் வாழ்க்கையில் நிலைப்பிற்காகச் செய்து கொண்டிருக்கின்றன.

## சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான வழிகள்

புவியில் உள்ள கூறுகள் மாசடைதலைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியாக இப்பிரச்சினை இன்று ஆராயப்படுகிறது. உலக நாடுகளின் அரசாங்கங்களோடு இவ் வெண்ணக் கருவை கவனமெடுக்கும் விஞ்ஞான நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் பல ஆய்வுகளை நடத்தி வருகின்றன. சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்ச்சிச் செயற்பாடுகள் கையாளப்படுகின்றன. சிறப்பாக சூழல் மாசடைதலைத் தடுக்கும் இந்த நடவடிக்கைகளின் பங்குதாரர்களாக இருக்கக் கூடிய பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் சூழல் பற்றிய கல்வியறிவு, மாசடைதலைத் தடுக்கும் எச்சரிக்கைகள், பிரசாரங்கள் என்பனவெல்லாம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இயற்கையின் முக்கிய வளங்களான நீர், காற்று, நிலம், வனம், கனிமங்கள் போன்றவற்றின் அழிவினை தடுப்பதற்கான பரிகார நடவடிக்கைகளில் எல்லாத் தரப்புகளும் கவனம் செலுத்தி வருவது நல்லதொரு செயற்பாடு ஆகும். அந்த வகையில் மரங்களை நடுதல், இயற்கைப் பசளைகளை பயன்படுத்துதல், குப்பைகூழங்கள் எரிப்பதை தவிர்த்து மண்ணிணுள் புதைத்தல், உக்காத பொருள்களை பொருத்தமான முறையில் அகற்றுதல், பொலித்தீன் பயன்பாட்டினைத் தடை செய்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் சூழல் மாசடைவதை தடுக்கலாம்.

## முடிவுரை

சுற்றுச்சூழலின் நலனை சீர்தூக்கிப் பார்த்து இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண்பது குறித்து சிந்தித்து செயலாற்றுவதற்கான ஒரு நாளாகவே இந்த உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது. ஆகவே சூழல் மாசடைவதைத் தடுக்க வேண்டியது மனிதராய்ப் பிறந்த எங்கள் ஒவ்வொருவருடைய பொறுப்பும், கடமையும் ஆகும்.





# மோல்ட்டாவிற்கு திருத்தந்தையின் வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம்

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)


மத்தியதரைக் கடலின் இதயத்தின் வரவேற்பை திருப்பயணியாக பெற்றேன் என அவர் மகிழ்ச்சி

அண்மையில் மோல்ட்டா நாட்டின் தலைநகர் வல்லேட்டாவின் பன்னாட்டு விமான நிலையம் சென்றடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விமானத்திலிருந்து மின்தூக்கி வழியாகத் தரையிறங்கினார். விமானத்திலிருந்து இவ்வாறு இவர் இறங்கியமை இதுவே முதல் முறையாகும்.

திருத்தந்தைக்கு முழங்காலில் வலி இருப்பதே இதற்கு காரணம். அந்நேரத்தில் காற்றும் பலமாக வீசிக்கொண்டிருந்தது. விமான நிலையத்தில், மோல்ட்டா அரசுத் தலைவர், அவரது துணைவியார், திருப்பீடத் தூதர், திருப்பீடத்திற்கு மோல்ட்டா நாட்டு சிறப்பு அரசுத்தூதர் ஆகியோர் திருத்தந்தையை வரவேற்றனர்.

இரு சிறார் மரபு ஆடைகளில் திருத்தந்தைக்கு மலர்களைக் கொடுத்து வரவேற்று ஆசிர் பெற்றனர். எல்லா இடங்களிலும் வெண்மை மற்றும் சிவப்பு நிறங்களைக் கொண்ட மோல்ட்டா நாட்டுக் கொடிகளும் வெண்மை மற்றும் மஞ்சள் நிறங்களைக்கொண்ட வத்திக்கான் நாட்டுக் கொடிகளும் பறந்துகொண்டிருந்தன.

விமான நிலையத்தில் அரசு மரியாதையைப் பெற்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு முக்கிய பிரமுகர்களும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். பின்னர் அங்குள்ள முக்கிய விருந்தினர் அறையில் மோல்ட்டா அரசுத் தலைவர் மற்றும் அவரது துணைவியாருடன் சிறிது நேரம் உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ். பின்னர் அங்கிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வல்லேட்டா நகரின் மாளிகைக்குக் காரில் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### மாளிகையிலிருந்து மக்களை வாழ்த்தினார் திருத்தந்தை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சென்ற கார் நகரத்தின் எல்லையைத் தொட்டவுடன் அவர் அதிலிருந்து இறங்கி குண்டுதுளைக்காத திறந்த காரில் ஏறினார். சாலையின் இரு பக்கங்களிலும் வத்திக்கான் கொடிகளுடன் எண்ணற்ற மக்கள் ஆரவாரத்தோடு நின்றுகொண்டிருந்தனர்.

மோல்ட்டாவின் 4 லட்சத்து 75 ஆயிரம் மக்களில் ஏறத்தாழ 90 சதவீதத்தினர் கத்தோலிக்கர் என்பதால் தங்களின் தனிநிகர் தலைவரைப் பார்ப்பதற்கு எவ்வளவு



ஆவலோடு அவர்கள் இருந்திருப்பார்கள் என்று சொல்லத்தேவையில்லை. திறந்த காரில் இருந்து கொண்டு அம்மக்களை ஆசீர்வதித்துக்கொண்டே அரசுத்தலைவர் மாளிகைக்குச் சென்றார் திருத்தந்தை.

இம்மாளிகை 1571ஆம் ஆண்டில் புனித யோவான் வீரப்பெருந்தகையினரின் தலைமையீடாக கட்டப்பட்டது. இம்மாளிகையில் வரவேற்பைப் பெற்ற திருத்தந்தை அங்கு முக்கிய அறை ஒன்றில் அரசுத்தலைவர் அவரது துணைவியார் ஆகியோருடன் சிறிதுநேரம் உரையாடினார்.

பின்னர் இத்தம்பதியரின் மூன்று மகன்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் திருத்தந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

திருத்தந்தை பிரான்சிஸ், புனித பவுலடியாரின் உருவப் படம் அமைந்த அழகான படம் ஒன்றையும் அரசுத்தலைவருக்குப் பரிசாக அளித்தார். பின்னர் ‘சிறந்த மனிதநேயத்தைக் கொண்டிருக்கும் மத்தியதரைக் கடலின் இதயமான மோல்ட்டாவில் திருப்பயணியாக வரவேற்பைப் பெற்றுள்ளேன். இந்நாட்டை ஆள்பவர்களுக்கு ஞானம் மற்றும் இரக்கத்தையும் இம்மக்களுக்கும் உலகம் அனைத்திற்கும் ஒற்றுமை மற்றும் அமைதியையும் கடவுளிடம் இறைஞ்சுகிறேன்’ - என்ற வார்த்தைகளை அம்மாளிகையில் விருந்தினர் புத்தகத்தில் எழுதி கையெழுத்திட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதற்குப் பின்னர் அம்மாளிகையின் மற்றோர் அறையில் மோல்ட்டா நாட்டு பிரதமர், அவரது துணைவியார், மகள் ஆகியோருடனும் உரையாடினார் திருத்தந்தை.

இச்சந்திப்புக்களுக்குப் பின்னர் அம்மாளிகையின் அறையில் மோல்ட்டா நாட்டு அரசு மற்றும் பன்னாட்டு தூதரக அதிகாரிகள், பொதுமக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்நிகழ்வில் முதலில் அரசுத்தலைவர் அவர்கள் திருத்தந்தையை வரவேற்று உரையாற்றினார். இவ்வுரைக்குப் பின்னர் திருத்தந்தையும் மோல்ட்டா நாட்டுக்குத் தன் முதல் உரையை ஆற்றினார். போரின் காற்றுகளுக்கு மத்தியில் வருங்கால அமைதியை ஒன்றிணைந்து உருவாக்குவோம் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பிற்குப் பின்னர் மாளிகையிலிருந்து 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள  மோல்ட்டா திருப்பீட தூதரகம் சென்று மதிய உணவருந்தி சிறிதுநேரம் ஓய்வெடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மாலை நான்கு மணியளவில் மகிழ்ச்சி எனப் பொருள்படும் தீவுக்குச் சென்றார் திருத்தந்தை. மோல்ட்டாவின் சகோதரித் தீவாகிய கோசோவில் அந்நாட்டின் முக்கிய அன்னை மரியா தேசிய திருத்தலத்தில் திருவழிபாடு ஒன்றில் கலந்துகொண்டு மறையுரையாற்றுவது மாலையில் நடைபெறும் முக்கிய நிகழ்வாகும்.

இத்துடன் திருத்தந்தையின் மோல்ட்டா நாட்டு முதல் நாள் பயண நிகழ்வுகள் முற்றுப்பெற்று அந்நாட்டில் பயண நிகழ்வுகளை நிறைவேற்றி உரோம் நகருக்கு வந்துசேர்ந்தார்.

‘அவர்கள் எங்களிடம் மிகுந்த மனிதநேயத்துடன் நடந்து கொண்டனர்’ (தி.ப.28:2) என்ற மையக்கருத்துடன் நடைபெற்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 36ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப்பயணம் நிறைவுக்கு வந்தது.

### மோல்ட்டா அரசுத்தலைவர் அவர்களின் வரவேற்புரை

‘உக்ரைன் போர் உலகளாவிய அரசியல் அமைப்பிற்கும் நம் அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது. திருத்தந்தையே! தங்களோடு நானும் இணைந்து இப்போர் முடிவுக்கு வரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறேன்’ - என்றார் மோல்ட்டா அரசுத்தலைவர்.

‘திருத்தந்தையே! இத்திருத்தூதுப் பயணத்திற்காக நீண்டகாலமாக மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தோம்.

‘மோல்ட்டாவுக்கும் திருப்பீடத்திற்கும் இடையேயுள்ள வரலாற்று சிறப்புமிக்க உறவுகள் நாளுக்கு நாள் வலிமை பெற்று வரும் இவ்வேளையில் இத்திருத்தூதுப் பயணம் நடைபெறுவது ஆறுதலளிக்கிறது.

‘உலகளாவிய சமுதாயத்தின் நலவாழ்வு பொருளாதாரம் போன்றவற்றை அதிகமாகப் பாதித்துள்ள கொவிட் -19 பெருந்தொற்று மனித ஒருமைப்பாட்டுணர்வுப் பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது. ஒட்டுமொத்தமாக புதியதொரு உலகளாவியத் தோழமையை ஏற்கவேண்டிய இக்காலக்கட்டத்தில் உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் உலகளாவிய அரசியல் அமைப்பிற்கும் நம் அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

‘இப்போரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளை ஆற்றிவரும் அதேநேரத்தில் திருத்தந்தையே தங்களோடு நானும் இணைந்து இப்போர் முடிவுக்கு வரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறேன்.

‘எமக்கு அருகிலுள்ள மத்தியதரைக் கடல் பகுதியும் சிரியா மற்றும் ஏமன் நாடுகளிலும் கடும் பிரச்சினைகள் நிலவுகின்றன. எமது பகுதியிலும் உலகெங்கிலும் ஆயுதக் களைவு இடம்பெறுவதையும் ஆயுதப்பரவல் தடைசெய்யப்படுவதையும் தங்களோடு சேர்ந்து நாங்களும் காண விரும்புகிறோம்.

‘திருத்தந்தையே! நம் பூமிக்கோளம் நோயுற்றுள்ளது. அது கோபமும் சோர்வும் அடைந்துள்ளது. எனினும் சுற்றுச்சூழல் அழிவு, காலநிலை மாற்றம் ஆகியவை வெளிப்படுத்தும் அடையாளங்களை மறந்து பூமிக்கோளத்தின் வளங்களை முறையின்றி நாம் பயன்படுத்தி வருகிறோம்.

‘இந்நிலையைப் புறக்கணிக்கும் சோதனை வலுவாக உள்ளது. திருத்தந்தையே! புலம்பெயர்ந்தோர் பிரச்சினையும் நம் மனதை வாட்டுகின்றது. இச்சூழலில் ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கையை ஏற்படுத்து பற்றியும், தலைமுறைகளுக்கு இடையே பரிமாற்றங்கள் மற்றும் உரையாடல் இடம்பெறுவது பற்றியும், கல்வி போதனை மற்றும் அமைதிக்கு இடையேயுள்ள தொடர்பு பற்றியும், ஒன்றிணைந்து நடப்பது பற்றியும், மனித வாழ்வின் துவக்கம் முதல் இறுதிவரை அதன் புனிதத்துவம் பற்றியும் நாம் உரையாடத் தொடங்கலாம்.’

-இவ்வாறு பல்வேறு தலைப்புக்களில் திருத்தந்தையை வரவேற்றுப் பேசி இறுதியில் மோல்ட்டீஸ் மொழியில் அவருக்கு நன்றியும் நல்வாழ்த்தும் கூறினார் மருத்துவரான மோல்ட்டா அரசுத்தலைவர்.

### மோல்ட்டா நாட்டிற்கான திருத்தந்தையின் முதல் உரை

‘உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். உங்கள் முன்னோர்கள் உரோமையை நோக்கிய திருத்தூதர் பவுலின் பயணத்தில் மிகுந்த கனிவுடன் நடந்துகொண்டனர். இப்போது அத்தகையதொரு அனுபவத்தை நானும் பெறுகின்றேன். மோல்ட்டா அருமையானதொரு புவியியல் இயற்கைச் சூழலைக் கொண்டுள்ளது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் செல்வாக்குகளைப் பெற்று உயிர்ச்சக்தி, கலாசாரம், ஆன்மீகம் மற்றும் அழகு ஆகியவற்றின் மையமாக மோல்ட்டா திகழ்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

நான்கு திசைகளிலிருந்தும் மோல்ட்டா தீவை நோக்கி வீசும் காற்றை மையப்படுத்தி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

‘முதலாவதாக மோல்ட்டா தீவுகளில் காற்று பெரும்பாலும் வடமேற்கிலிருந்து வீசுகிறது. இது வடக்கு ஐரோப்பாவை நினைவுபடுத்துகிறது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இல்லமானது, அமைதியைப் பேணுவதில் ஒன்றுபட்ட ஒரு பெரிய குடும்பத்தின் இருப்பிடமாக கட்டப்பட்டுள்ளது.

‘உங்கள் தேசிய கீதம் பாடப்படும் போதெல்லாம் ஒற்றுமையும் அமைதியுமே நீங்கள் கடவுளிடம் இறைஞ்சும்




கொடைகளாக உள்ளன. அமைதி ஒற்றுமையிலிருந்து எழுகிறது, அது நாம் ஒருவருக்கொருவர் இணைந்து வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக்கிறது.

நீதி, நேர்மை, கடமை உணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவை முதிர்ச்சியடைந்த பொதுமக்கள் சமுதாயத்தின் இன்றியமையாதத் தூண்களாக அமைந்துள்ளமையால் நீங்கள் எப்போதும் சட்டப்பூர்வ மற்றும் வெளிப்படைத்தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். காரணம், இதுவே ஊழல் மற்றும் குற்றத்தை ஒழிக்க உதவும் ஒளியின் தூண்களாக செயல்படுகின்றன.

இரண்டாவதாக வடக்குக் காற்று பெரும்பாலும் மேற்கிலிருந்து வீசும் காற்றுடன் கலக்கிறது. இது சாந்தமான ஒற்றுமை மற்றும் கருத்தியல் காலனித்துவ வடிவங்களுக்கு அடிபணியாமல் கடந்த காலத்தின் நினைவைப் பாதுகாத்து தலைமுறையினரிடையே மரியாதை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.’ - என்றார்.

# இப்போது எப்படி வாழ்கிறோம் தெரியுமா?



புரோக்கர்கள் மூலம் பெண் தேடிய காலம் போய் மெட்ரிமோனி மூலம் பெண் தேட ஆரம்பித்துவிட்டோம்.

நேரமும் பணமும் தான் விரயம் ஆகும்.

நாட்டைக் காக்கும் இராணுவ வீரர்களை விட அரசியல்வாதிகளும் நடிகர்களும் கோடிகளில் சம்பாதிக்கின்றனர்.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் எல்லாம் ஆரோக்கியமானது அல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகம் பேர் பாலியல் வழக்குகளில் தொடர்புடையவர்கள்.

செவ்வாய்க்கு ராக்கெட் விடும் தொழில்நுட்பம் இருக்கும் நம்மிடம் சாக்கடையை சுத்தப்படுத்த உபகரணங்கள் இல்லை.

குணமான பெண்களை விட அழகான பெண்களை தான் நம் கண்கள் தேடும்.

இங்கு பல பேரின் படித்த படிப்பிற்கும் வேலைக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. மக்களின் நலனை விட மதத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மனிதனை விட மாடும் நாயும்தான் முக்கியம்.

இங்கு போராடித் தான் ஒவ்வொரு உரிமையையும் மீட்க வேண்டி இருக்கிறது.


பிடித்த வேலையை செய்பவர்களை விட கிடைத்த வேலையை செய்பவர்கள் தான் அதிகம்.

வாழ வழி தெரியாமல் சாமியார் ஆனவர்களிடம் வாழ்க்கைக்கு வழி கேட்டு நிற்கிறார்கள்.

படிக்காதவர்கள்தான் படித்தவர்களை ஆளுகிறார்கள்.

இன்னும் நிறைய நிறைய இருக்கின்றது. இவற்றை எல்லாம் சகித்துக் கொண்டு தான் வாழ வேண்டி இருக்கின்றது.

# இனி இப்படி நடக்க வேண்டும்



40 வயதிற்கு பின்னரும் முதல் திருமணம் கொள்வதை விமர்சனம் இன்றி சமூகம் ஏற்றுக்கொள்ளலாம்.

80 வயதிலும் தம்பதிகள் குழந்தைகள் பெற்றுக் கொள்வதை ஏற்றுக்கொள்ளலாம்.

மறுமணம் பெண்களும் செய்து கொள்ளலாம், 60 வயதிற்கு பின்னரும் கூட. அதை மகிழ்ச்சியுடன் நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

பெண் சிசுவை ஏற்றுக்கொள்ளலாம். பெண் குழந்தைகள் சுமையானவர்கள் அல்ல.

நம் உறவினர் ஒருவரின் புது மருமகள் கறுப்பாக இருப்பதை உறவினர்கள் ஏற்றுக்கொள்ளலாம். குறைகூற ஒன்றும் இல்லை இதில்.

உங்கள் மருமகளுக்கு சமையல் தெரியாததை ஏற்றுக்கொள்ளலாம்.

உங்கள் காதலிக்கு/ மனைவிக்கு ஏற்கனவே ஒரு காதல் இருந்ததை ஏற்றுக்கொள்ளலாம்.

நாட்டில் அனைவரும் மருத்துவராகவே ஆக வேண்டிய அவசியம் இல்லை. வேறு ஒரு திறமை அவர்களை ஆளுகை செய்யலாம்.

அனைத்து கட்சியின் ஆதரவாளர்களையும் நண்பர்களாக ஏற்றுக்கொள்ளலாம்.

தந்தையின் கண்டிப்பை மகன்கள் ஏற்றுக்கொள்ளலாம்

குழந்தைகளின் கனவுகளை பெற்றோர்கள் மதிப்பளித்து ஏற்றுக்கொள்ளலாம். சேட்டை செய்யும் குழந்தைகளை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளலாம்

கண்டிக்கும் ஆசிரியர்களை, மாணவர்களும் பெற்றோரும் ஏற்றுக்கொள்ளலாம்

பெண்பிள்ளைகளின் காதலையும் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளலாம்.

தங்கைகளின் காதல்களை அண்ணன்கள் ஏற்றுக்கொள்ளலாம். மருமகளும் தனிக்குடித்தனம் செல்ல விரும்புவதை மாமியார்கள் ஏற்றுக்கொள்ளலாம்.

கணவன்களுக்கு உடன்பிறந்தவர்களின் மீது உள்ள பாசத்தை மனைவிகள் ஏற்றுக்கொள்ளலாம்.

திருமணத்திற்கு பின்னும் தன் பெற்றோருக்கு உதவ வேண்டும் என்ற உங்கள் மனைவியின் ஆசையை கணவன்கள் ஏற்றுக்கொள்ளலாம்

இரண்டு நிமிட மின் துண்டிப்பை கோபமின்றி ஏற்றுக்கொள்ளலாம். கடனை திருப்பி தராத நண்பனையும் ஏற்றுக்கொள்ளலாம்

கலப்பு திருமணத்தை சமுதாயம் ஏற்றுக்கொள்ளலாம் உங்கள் வயதையொத்த உங்கள் மனைவி பொறுப்பில்லாமல் இருப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். விதவை, பூவுடனும் பொட்டுடனும் இருப்பதை சமுதாயம் ஏற்றுக்கொள்ளலாம்

ஏழையை பணக்காரன் ஏற்றுக்கொள்ளலாம் பணக்காரனை ஏழை ஏற்றுக்கொள்ளலாம். மாற்றுத்திறனாளி ஒருவரை தலைவராக ஏற்றுக்கொள்ளலாம். ஆலயத்திற்கு நவீன உடையில் வரும் வாலிபர்களை சபையின் மூப்பர்கள் ஏற்றுக்கொள்ளலாம்

ஒரு மனிதனே பிறப்பால் அனைவரும் சமம் என்ற பரந்த மனம் கொண்டவனாக இருக்க கடவுள் அதை காட்டிலும் பரந்த மனப்பான்மை உடையவராயிருக்க மாட்டாரா என்ன? ஏற்றுக்கொள்ளலாம். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே உங்களை நீங்கள் முதலில் ஏற்றுக்கொள்ளலாம்

# உண்மை நிகழ்வுகள் கசக்கும்



தப்பு செய்தால், அதை தட்டிக் கேட்கக் கூடாது.

உண்மை சொன்னால் பிடிக்காது. இவன் ஒரு பைத்தியம் என்று வர்ணிக்கும் மக்கள்.

தவறு செய்யும் போது துணை போக வேண்டும். இல்லை என்றால், அவன் பகையாளி. இவன் என் உண்மையான பங்காளி இல்லை என்பான் நண்பன்.

நன்றாக வாழ்பவர்கள் மீது பொறாமை கொள்வார்கள். நல்ல காரில் செல்கின்றான். முன்பு சைக்கிளில் போனான் இப்ப பார் காருல போறான் அல்லது நல்ல உடை அணிந்தால், குடும்பத்தோடு உணவகம் சென்றால் இப்படி பல வகை உண்டு.

கேட்கும் போது, பணம் கொடுக்க வேண்டும். அப்படியே கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கு தவணை திகதி, எழுத்து வடிவத்தில் (agreement) கேட்டால், கோபம் வரும். என் மீது நம்பிக்கை இல்லையா? என்ற குற்ற உணர்வு.

நன்றாக படித்தால் பிடிக்காது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இதை விட, இதற்கு நிவர்த்தியை காண வேண்டும்.

இதை சற்று சிந்தித்தால், அதன் பின் நோக்கம் என்ன என்பதை புரிய முடியும். ஒவ்வொருவரும் தங்கள் நிலையில் நன்றாக இருக்கும் போது, நன்றாக வாழும் போது, இந்த கசப்பான உண்மைகள் எல்லாம் இனிப்பானதாக மாறும். இதற்கு ஒவ்வொருவரின் சூழ்நிலைகள் தான் காரணம். இதை நிவர்த்தி செய்ய ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். நம் நிலை சரியாக உள்ளது என்பதை நினைத்து, உங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் என்று அனைவருக்கும் உதவி செய்யும் மனம் வரவேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். நாம் நன்றாக வாழ்வதோடு, மற்றவர்களையும் நன்றாக வாழ வழிவகை செய்வோம்.

# வாழ்க்கையின் சில அருவருப்பான உண்மைகள்

இந்த உலகம், நீ எப்போது கீழே விழுவாய் என்று பார்த்துக்கொண்டு இருக்கும். நீ முன்னேறுவதை எல்லாம் ரசிக்காது.

பணம் இருந்தால் தான் நீ உறவினர். இல்லை என்றால் உறவு - இல்லார். அநாதை தான்.

வாழ்க்கையில் எந்த ஒரு உயர்வுக்கு நீ போனாலும் உன்னை மட்டம் தட்ட கீழ் இருக்கும் நபர்கள் குறைத்துக்கொண்டு தான் இருப்பார்கள்.

பணத்திற்கு சாதி மதம் எல்லாம் இல்லை. பணம் இல்லையேல் சாதி மதம் எல்லாம் பார்க்கப்படும்.

நீ ஒரு வேலையில் இருக்கும் போது வேலை இல்லாத நண்பன் போன் செய்தால் ஒரு தடவை நீ யோசிக்கதான் செய்வாய்.

கடைசி வரை உன்கூட இருக்கப்போகும் உறவு நீ மட்டுமே. உன் மேல் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அன்பு செலுத்தப்போவது உன் பெற்றோர் மட்டுமே.

நாம் முன்னேறுவதை பார்த்து பொறாமைப்படும் கூட்டமே இங்கு அதிகம் .

அந்த பொறாமை அவர்களை என்னென்னமோ வேலைகள் செய்ய தூண்டும்.

பல நேரங்களில் நம் முதுகில் குத்துவது நாம் நேசிக்கும் உறவுகளே. இது புரிய நாள் ஆகும்.

நாம் இருக்கும் போதும், இறக்கும் போதும் நம் பின்னால் பேசுபவர்கள் இருந்து கொண்டே தான் இருக்கப்போகிறார்கள்.

சில நேரங்களில் ஒரு தீவிரவாதியிடம் கூட மனிதம் இருக்கும், ஆனால் எந்த ஒரு சாமியாரிடமும் இருக்காது.

இங்கு பாதி பேர் கடவுளை தரிசிப்பதற்கு காரணமே, அவர்களின் புலம்பலை கேட்க ஆள் இல்லாத காரணங்கள் தான்.

# ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருள் பெறுவதற்கு எதற்காக அவதானம் செலுத்தவில்லை?



கம்மன்பில கேள்வி

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு டொலர் அனுப்புவதை தவிர்ப்பதால் ராஜபக்ஷர்கள் பாதிக்கப்படப் போவதில்லை, சாதாரண நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள். ஆகவே வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வங்கிக்கட்டமைப்பின் ஊடாக நாட்டுக்கு டொலர் அனுப்ப வேண்டும்.

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏன் அவதானம் செலுத்தவில்லை என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகளுக்குமிடையிலான சந்திப்பு கம்யூனிச கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் நேரில் வரியை அதிகரித்துள்ளது.

வரி அறவிடல் ஊடாக 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 24 சதவீதமாக காணப்பட்ட தேசிய வரி வருமானம் 2021ஆம் ஆண்டு 08 சதவீதமாகக் காணப்படுகிறது.

நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் நேர் வரியுடன், நேரில் வரியையும் தற்போது அமுல்படுத்தியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கம் நேரில் வரி அறவிடலில் சற்று தளர்வான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் பல்வேறு காரணிகளால் இலங்கைக்கு டொலர் அனுப்புவதை தவிர்த்து வருகிறார்கள்.

டொலர் அனுப்பாவிடின் அதனால் ராஜபக்ஷர்கள் பாதிக்கப்படப் போவதில்லை. சாதாரண நடுத்தர மக்களே மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வார்கள்.

ஆகவே வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தமது உறவுகளுக்காக வங்கி கட்டமைப்பின் ஊடாக டொலர் அனுப்ப வேண்டும்.

உக்ரைன் - ரஷ்யா மோதலைத் தொடர்ந்து பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்முதலை தவிர்த்து வருகின்றமையை ஆசிய நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருள் கொள்வனவு செய்யும் சாத்தியம் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பில் இதுவரை அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசமைப்பு சார்ந்த ஒருசில விடயங்களை மறுசீரமைக்க வேண்டும். - என்றார்.

## மித்தெனியவில் வீடு ஒன்று டீசல் களஞ்சியசாலையானது!



சட்டவிரோதமான முறையில் டீசலை வைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மித்தெனிய, கட்டுவன வீதி பகுதியில் வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 1,700 லீற்றர் டீசல் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபோல், சட்டவிரோதமான முறையில் டீசல் வைத்திருந்த சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர் மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

## நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்று சென்ற ரிஷாத்!

வில்பத்து, கல்லாறு பிரதேசத்தில் காடழிக்கப்பட்ட பகுதிகளை மீளக் காடுகளாக மாற்றுமாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக ரிஷாத் பதியுதீன் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளார்.

தமக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, குறித்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரியந்த ஜயவர்தன, ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வில்பத்து கல்லாறு சரணாலயத்தில் காடழிப்பை மேற்கொண்டதற்காக மீண்டும் மரங்களை நடுமாறு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

## ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கொழும்பில் 3 ஆயிரம் ரூபா வவுச்சர் வழங்கல்!

### மாநகர மேயர் ரோஸி தெரிவிப்பு



கொழும்பு மாநகர எல்லையில் வசிக்கும் மிகவும் கஷ்டப்படும் ஒரு லட்சத்து 20ஆயிரம் குடும்பங்களுக்கு 3ஆயிரம் ரூபா உலர் உணவு வவுச்சர் வழங்க இருக்கின்றோம்.

சதொச ஊடாக உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான வேலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொழும்பு மாநகர அதிகார பிரதேசத்தில் நூற்றுக்கு 60 வீதமானவர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களாவர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த மக்கள் மிகவும் கஷ்டமான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

அதனால் கொழும்பு மாநகரசபை, இந்தப் பகுதியில் வாழும் மிகவும் கஷ்டப்படும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் குடுபங்களுக்கு மூவாயிரம் ரூபாவுக்கான உணவு வவுச்சர் ஒன்றை இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

சதொச ஊடாக அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்குத் தேவையான நிதி மாநகர சபையால் அனுமதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருப்பதுடன் சதொச நிறுவனத்துக்கும் அந்த பணம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

அத்துடன் ஒரு லட்சத்து 20 ஆயிரம் குடும்பங்களுக்கான அதற்கான கூப்பன் அட்டையும் அச்சிடப்பட்டிருக்கின்றது. தற்போது அதனை பகிர்ந்தளிக்க முறையான வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்த நடவடிக்கையை எங்களால் தொடர்ந்து செய்ய முடியாது ஏனெனில் இது பாரியதொரு தொகையாகும்.

இதுவரை கொழும்பு மாநகர பிரதேசத்தில் பொது மக்கள் நிவாரணக் கொடுப்பனவு பெறும் 13ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன.

இவர்களுக்கு வழங்குவதுபோல் கஷ்டப்படும் ஒரு லட்சத்து 20ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

அதனால் ஐக்கிய நாடுகள் உலக உணவு அமைப்பு மற்றும் வேறு நிறுவனங்களுடன் நாங்கள் கலந்துரையாடி இருக்கின்றோம்.

அவர்கள் ஊடாக நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று கொழும்பு நகர மக்களுக்கு உதவி செய்யுமாறு பல்வேறு சர்வதேச நாடுகளுக்கும் நாங்கள் எழுத்து மூலம் கோரி இருக்கின்றோம்.

குறிப்பாக மருந்துப் பொருள்கள், உணவு வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்குமாறு கேட்டிருக்கின்றோம்.

அதேபோன்று சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு போஷாக்கு உணவு பெற்றுக்கொடுக்கவும் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் கலந்துரையாடி இருக்கின்றோம்.

கொழும்பு வாழ் மக்களில் சவர்க்கார கட்டி ஒன்றை வாங்க முடியாத நிலைமையில் இருப்பவர்களும் இருக்கின்றனர்.

அதனை வாங்கும் பணத்துக்கு தனது குழந்தைகளுக்கு உணவு பெறுக்கொடுக்க ஒதுக்குகின்றனர்.

எனவே கொழும்பு மாநகரசபை என்றவகையில் கொழும்புவாழ் மக்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். - என்றார்.

# தேவையான மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய நடவடிக்கை!

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், 15 நாள்களுக்கு ஒருமுறை மசகு எண்ணெயை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் புத்துயிர் பெற்றுள்ளதாகவும், எரிபொருள் உற்பத்தியை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது இடம்பெறுவதைப் போன்று எரிபொருள் விநியோகம் வழமை போன்று இடம்பெறும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், பல பகுதிகளில் ஏராளமான எரிபொருள் வரிசைகள் தொடர்ந்து காணப்படுவதோடு, சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் இன்மையால் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?

## அங்கம் -23

தங்களது உரிமைகள் மறுக்கப்படக் கூடாது, உரிமைகளுக்கு மாறான – உரிமைகளைப் பறிக்கின்ற – சட்டங்கள் ஆக்கப்பட கூடாது எனக் காலிமுகத்திடலில் 1956இல் சத்தியாக்கிரகம் நடத்தியவர்கள் தமிழ் மக்கள்.

காலிமுகத்திடலில் இப்போது 'கோட்டா கோ ஹோம்' நடத்தும் போராட்டக்காரர்கள், முன்னர் தமிழ் மக்கள் பாதகமாக நடத்தப்பட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் விதத்தில், பொது நூலக எரிப்பு நினைவுகூரல், முள்ளிவாய்க்கால் கஞ்சி என உணர்வு கலந்த விடயங்களை அரங்கேற்றினார்கள். ஆனால் தமிழ் மக்கள் எங்கே நிற்கிறார்கள்?

கோட்டாபய ஜனாதிபதியாகத்தான் இருக்கிறார். ஆனால் காலிமுகத்திடலில் 74 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய தமிழர்களது போராட்டம் அதிகாரப் பகிர்வு, சமஸ்டி, இறைமை மீட்பு, பிரிவினை என உலா வந்து பழையபடி அதிகாரப் பகிர்வின் மூலம் ஒரு புதிய அரசமைப்பின் கீழ் தீர்வு உருவாக வேண்டுமென கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இரு தினங்களுக்கு முன் பத்திரிகைகளுக்கான செவ்வி ஒன்றில் கூறும் நிலைமைக்குச் சுற்றி வந்து நிற்கிறது.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் "அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அது பழைய அரசமைப்பில் புதிதாக 'பட்ச்' போடுவதாகவோ, அல்லது 'ரிங்கரிங்' செய்வதாகவோ இருக்கக்கூடாது. அரசமைப்புத் திருத்தம் அன்றி முழுமையான புதிய அரசமைப்பு ஒன்றே அவசியமானது" எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

"தமிழ் மக்கள் நாம் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் எமது வேண்டுகோள் நிறைவேற்றப்படவேண்டும். அது தொடர்பில் பேச்சுக்கள் நடத்துவதற்கும் இது மிகவும் பொருத்தமான காலமாக உள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆக, இந்த 74 வருட காலமும் தமிழ் மக்கள் பேசிப் பேசியே எதுவித தீர்வும் இல்லாமல் காலத்தை கழித்தார்கள் என்பதுதான் மிச்சம். எத்தனையோ தீர்வுத் திட்டங்கள் இணங்கப்பட்டு அவை பெட்டிகளில் ஆவணங்களாக முடங்கிக் கிடக்கின்றன. அவற்றுக்கும் மேலாக இன்னும் பேசிக்கொண்டே, பெரும்பான்மையினர் தரும் கயிறுகளை விழுங்கிக்கொண்டு இருப்போம் என்ற பொருள் தொனிக்கிறது.

ஒற்றையாட்சிக்குள், சமத்துவமற்ற நிலையைத் தவிர வேறு எந்த விதமான இன அடையாள உரிமையிலும் ஒரு தீர்வைத் தர சிங்களப் பேரினவாதம் தயாராக இல்லை. இதனை இன்னும் தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டு அதற்கேற்ப அணுகுமுறைகளை அமைக்காவிடில் அவர்களைப் பற்றி என்ன கூறுவது என்பது கஷ்டம்.

விடுதலைப் புலிகளின் பிரபாகரன் ஒவ்வொரு அரசாங்கத்தையும் "தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஓர் அரசியல் கட்டமைப்பை சிங்களத் தலைவர்கள் முன்வைக்கவேண்டும். அப்படியில்லை என்ற பட்சத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டம் தொடரும். ஏனெனில், பேரினவாத சிங்கள மக்களின் அரசமைப்புகளுக்கு இடையே எப்போதும் தமிழ் மக்களின் உரிமைகள் அடக்கப்படப் போவதில்லை" – என்ற கூற்றை வெளிப்படுத்தினார். மாறாக, தமிழ் மக்களுக்கு சிங்களத் தலைமைகள் எந்தவித தீர்வையும் முன்வைக்க வில்லை. வைத்தாலும் அவை தந்திரங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டன. விடுதலைப்போராட்டத்தை அழிப்பதிலேயே குறியாக இருந்து, அதுவே வெற்றிகரமாக ஒப்பேற்றவும்பட்டது.

போரின் பின் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன என்ற கருத்தியல் பரப்பப்பட்டது. அது இன்னும் தொடர்கிறது. ஆனால் தமிழ் மக்கள் காலிமுகத்திடலில் 1956 இல் எப்படி நின்றார்களோ அந்த நிலையில் தான் அவர்கள் இன்னும் உள்ளார்கள்.



பல விதங்களில் இந்த தமிழ் மக்கள் விசித்திரமான பிறவிகள். விசேடமான பண்புகளைக் கொண்டவர்கள். அவையே அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை காலதாமதமாக்கி, அதனை இழுத்துச் செல்கின்றன.

ஏனெனில், இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல சமயங்களில் அந்த நாட்டின் ஜனநாயகத்திற்காகவும் ஒட்டுமொத்த மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்க வேண்டிய தேவை, பொறுப்பும், அன்றில் நிர்ப்பந்தம் என்று சொல்லி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அவற்றை தங்களின் தோள்களிலே சுமந்தார்கள்; சுமப்பார்கள். இவ்வளவுக்கும் அவர்கள் இலங்கையை ஒரே தேசமாகப் பார்க்காமல் (அவற்றில் எத்தனையோ குளறுபடிகள்) 1976 இல் தமது இறைமையை மீளக்கோரி தீர்மானங்கள் நிறைவேற்றியவர்கள்தான். அப்படியும் முழு நாட்டில் அல்லது தேசத்தில் ஜனநாயகம் நிலைத்தால்தான் தமக்கும் ஏதோ ஒரு தீர்வு வரும் என்ற எண்ணம் கொண்டார்கள். ஸ்ரீமாவோவின் ஆட்சியில் நடத்தப்பட்ட ஜனநாயகமற்ற, அதர்மமான, நீதியற்ற அடக்குமுறைகள் தமிழ் மக்கள் அனுபவிக்காதவையல்ல. ஆனால் அதே ஸ்ரீமாவோவின் குடியுரிமையை பறிக்க ஜே.ஆர். சட்டங்கள் கொண்டு வந்தபோது அவற்றுக்கு எதிராக முன்னணியில் நின்று போராடியவர்கள் அமிர்தலிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தினர்களும்தான்.

அதற்காக அவர்கள் தெற்கில் மோசமாக நையாண்டி செய்யப்பட்டார்கள். ஜே.ஆராலேயே அமிர்தலிங்கம் தனிப்பட்ட ரீதியில் பலத்த எச்சரிக்கைக்கு ஆளானார். அரசு இயந்திரங்கள் அவர்களுக்கு எதிராகப் பலத்த பிரசாரங்களில் இறங்கின. கடைசியில் தமிழ்த்தலைவர்கள் 'ஜனநாயகத்தின் விடிவெள்ளிகள்' என்ற கௌரவம் பெற்றோர்களே ஒழிய, தமிழ் மக்களுக்கு என்று ஒரு நன்மை இவற்றால் வந்ததில்லை. அதற்காக ஜனநாயகத்துக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்களுக்கு, அவற்றுடன் கைகோர்த்துப் போக வேண்டும் என்பதல்ல. பேரினவாதத்தின் அதிகாரவர்க்க உட்பூசல்கள் விடயத்தை அவர்களிடையேயே விட்டிருக்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் பேரினவாத நாடாளுமன்றம் ஜனநாயக ரீதியாக நடந்து கொள்வதாகக் காட்டிக்கொண்டாலும் ஒரு நீதியான ஆட்சியை – வேண்டாம் குறைந்தபட்சம் சட்டத்துக்கு அமைவான ஆட்சியை – தமிழ் மக்கள் மேல் காட்டியதில்லை. 1978ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராக அமுல் நடத்தப்படுகின்ற பயங்கரவாத தடைச்சட்டம் அறத்துக்கே முரணானது. அது மட்டுமல்ல நீதியும் அற்றது. அது சட்டமாகவே வளர்ந்து, கருணை கூட அதிலிருந்து தோண்டப்பட்டு, இன்றுவரை அதன் அடிப்படையில் அநியாயங்கள் தொடர்ந்தும் இழைக்கப்படுகின்றன. அதற்கு மேலாக கோட்டா ஜனாதிபதியானதும் சட்டமேயற்ற நிர்வாகம்தான் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முழுநாட்டுக்குமே தரப்பட்டது.

இந்த நிலைமையைத் தங்களுக்காக உருவாக்கியவர்கள் பெரும்பான்மை இன மக்களே. ஏதோ தப்பிதமாக ஒரு தேர்தலில் இவர்களைப் பதவிக்கு அவர்கள் கொண்டு வந்து விடவில்லை. தெரிந்தும், தெரிந்திருந்தும், அவர்களின் பெரும்பாலானவர்களை அறிந்தும் அறிந்திருந்தும், தமிழ் மக்களை அவர்களின் இடத்தில் வைத்தவர்கள், அப்படி வைக்க அவர்கள்தான் சரியானவர்கள் என்று கருதித்தான் அவர்களை அமோகமாக வெற்றியடைய வைத்தவர்கள். அதன் பெறுபேறுகளை சிங்கள சமூகம் எடைபோட்டு, இவற்றிலிருந்து மீளுவது எப்படி என்று வழிகள் தேடும்போது அப்படியான ஒரு பணியைக் கூட்டமைப்பும் தன் தோள்களில் தூக்கி உள்ளது.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பின் சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் அருமையான – சிலாகிக்க கூடிய – ஆவேசமான பேச்சுக்களை சிங்களத்தில் கூட நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் ஆற்றுகிறார்கள். இன்று இருக்கும் அரசியல் சூழ்நிலைகளில் இவை எல்லா இன மக்களாலும் ஆமோதிப்புடன் கேட்கப்படுகின்றன. அரசியல் பரப்புகளில் பலத்த ஆதரவை பெறுகின்றன.

ஒரு தேசிய அரசு சஜித் தலைமையின் கீழ் உருவாக இருந்த சந்தர்ப்பத்தை ரணில் தந்திரமாக – தன்னலமாக – குறுக்கே ஓடி, ராஜபக்ஷ அரசை பாதுகாக்கத் துணை போனார் என்று ஆத்திரம் இருவருக்கும். அந்த தேசிய அரசில் அவர்களுக்குக் கிடைத்து இருக்கக்கூடிய அமைச்சர் பதவிகளும் கிடைக்காமையால் எல்லாம் இணைந்த கோபங்களும் உண்டு என்ற அபிப்பிராயங்களும் உலவுகின்றன. இந்தத் தகவல்களினால் தான் நீதியரசரும் அமைச்சுப் பதவியை ரணிலின் கீழ் பரிசீலிக்கலாம் என எண்ணினாரோ என்னவோ?

ஒன்று தெளிவாக இருந்தது. சுமந்திரன் இணக்கம் தந்த தேசிய அரசு கூட தமிழ் மக்களுக்கான திட்டவட்டமான தீர்வு ஒன்றை அடிப்படையாக முன்னெடுக்கவில்லை. அப்படியான ஒன்று பேசப்பட்டாலும், 'இந்த நேரத்தில் அதை முன்னெடுப்பது உசிதமல்ல, அரசை அமைத்த பின் போகப் போகப் பார்க்கலாம்' என்று வழமையான பல்லவிகளும் வெளிவந்தன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மொட்டுக் கட்சியின் அங்கத்தவர்கள் மட்டுமல்லர், சஜித் பகுதியில் பலரும் சமயம் வரும் போது தீர்வையொட்டிச் சறுக்குவார்கள். கடந்து வந்த அனுபவங்களில் இவை ஆழமாக புரிந்து கொள்ளப்பட வேண்டியவை.

இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசு சார்பு மொட்டு கட்சியினர், மாற்று கட்சியினர் பலர் சிங்களம் மாத்திரமே அறிந்தவர்கள். சுமந்திரனும் சாணக்கியனும் சிங்களத்தில் எறியும் சாணி தங்களுக்குத்தான் என உணர்ந்து கொள்வார்கள். ஆனால் அதைப்பற்றி அவர்கள் அக்கறை கொள்ள போவதில்லை.

இதைப்போலவே முன்னைய வருடங்களில் பொன்னம்பலம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை எனத் தமிழ் பிரதிநிதிகள் மாத்திரமல்லர், கொல்வின் ஆர்.டி. சில்



வா, பீற்றர் கெனமன், டாக்டர் விக்ரமசிங்க, மைத்திரிபால சேனாநாயக்க எனப் பலர் சமத்துவம், நீதி, நியாயம், ஜனநாயகம் பற்றி மணிக்கணக்கில் ஆங்கிலத்தில் பேசி இருந்தாலும் – அப்போது அங்கத்தவர்களாக இருந்தவர்களில் பலர் ஆங்கில அறிவு உள்ளவர்களாக, சமூக அந்தஸ்து உள்ளவர்களாக இருந்தார்கள் – சுமந்திரன், சாணக்கியன் சொல்வது எப்படி இன்றைக்கு அவர்களுக்கு உறைக்கிறதோ அதேபோல் அப்பொழுதும் அவர்களுக்கு உறைத்தது.

ஆனால் பேரினவாதம் தனது பாதையில் இருந்து தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. தனது காரியங்களை சாதித்துக் கொண்டே இருந்தது. அதுதான் தன் பாதை என அது வகுத்துக் கொண்டது.

ஜனநாயகத்தின் போர்வையில், தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடக்கம் குமுதினிப்படகு, கிருாந்திகொலை, செம்மணி, கொக்கட்டிச்சோலை எனத் தமிழினத்துக்கு எதிரான கொடூரங்களைப் பட்டியலிட்டால் அவை பெரும் புத்தகமாகவே வளரும். இவற்றுக்கு இதுவரை நீதி கிடைத்ததா? சம்பவங்கள் எல்லாமே சர்வதேசத்தின் முன்னால் காலத்துக்கு காலம் பதியப்பட்டும் கூட சிங்களப் பெரும்பான்மை முள்ளிவாய்க்காலை நடத்தித்தான் முடித்தது.

ஆகவே சுமந்திரனும் சாணக்கியனும் சேர்ந்து நிறுவக் கூக்குரலிடும் ஜனநாயகம், இந்தப் பண்புகளைக் கொண்டவர்களிடைய எந்த வடிவத்தில் வரும் என்பதையும் தெரிந்து கொண்டு அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

## பாடசாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருக்கடியான விடயம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

நாம் இது தொடர்பாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம்.

அக்கடிதத்தில், தற்போதைய நெருக்கடியில் ஆசிரியர்கள் ஐந்து நாள்களும் பயணம் செய்து கற்பித்தல் பணியில் ஈடுபடுவது முடியாத காரியம்.

நாளுக்கு நாள் எரிபொருள்களின் விலைகள் அதிகரித்தபடியே உள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் பயணம் செய்வதென்பது உழைப்பின் முழுத் தொகையையும் பயணத்திற்குச் செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்களை முழு நாள்களும் அழைப்பதெனில் அவர்களின் போக்குவரத்துச் செலவினத்தில் அரைப்பங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் மற்றைய திணைக்களங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு ஒத்ததாக பாடசாலைகளை இயக்குவதே சிறந்த வழியாகும்.

ஆசிரியர்களின் பாடநேரங்களை அதிகரித்து அவர்களை சுழற்சி முறையில் அழைப்பதுவே பொருத்தமானது. இதனை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்த நடைமுறையானது பாடசாலை அதிபரின் நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக நெகிழ்ச்சிப் போக்குடையதாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சகல மார்க்கங்களையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

உணவுப்பஞ்சம், போக்குவரத்துக் கஷ்டம், அன்றாட வாழ்க்கைக்கான துயரம். இவை அனைத்துமே மாணவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டில் உள்ள குழந்தைகளையும் பாதித்துள்ளது.

போதிய போசாக்கின்மையால் குழந்தைகளின் ஆரோக்கியம் கேள்விக்குறியாகியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனை மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர். இது அபாயகரமானது என்பதால் மாணவர்களின் மதியபோசனம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கான போசாக்கு உணவு பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம். – என்றார்.

---

## அனலைதீவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிப்பட்டிருக்கலாம் என்றனர்.

கடலில் காணாமல் போனவரின் மனித எச்சங்கள் நீண்ட காலத்திற்குப் பின்னர் இப்படிக் கரை ஒதுங்கி இருக்கலாம் என வேறு சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்தில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

---

## தியாகி சிவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலி நிகழ்வில் ஈகைச்சுடரினை பொன் சிவகுமாரனின் சகோதரி ஏற்றி வைக்கவுள்ளார். அகவணக்கம், மலரஞ்சலி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக பொன். சிவகுமாரனின் காலத்தில் அவருடன் செயற்பட்ட அரசியல் தலைவர்கள், நண்பர்களின் அஞ்சலி உரைகள் இடம்பெறவுள்ளன.

## ரஷ்ய - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமானத்தை கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைத்திருக்கவேண்டும் என ஜூன் இரண்டாம் திகதி நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு குறித்து இலங்கை தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சு தனது எதிர்ப்பை அடுத்த நாள் வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளிற்கும் இடையிலான பாரம்பரிய நல்லுறவிற்கு பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த விவகாரத்திற்கு உடனடியாக தீர்வைக் காணுமாறு இலங்கை அதிகாரிகளை கேட்டுக்கொண்டோம் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமான நிறுவனம் இலங்கைக்கான தனது சேவைகளை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இலங்கைக்கான பயணத்திற்கான விமான பயணச்சீட்டுகள் விற்பனை இடைநிறுத்தப்படுவதாகவும் ஏரோஃப்ளோட் அறிவித்துள்ளது.

ஜூன் இரண்டாம், நான்காம், ஐந்தாம் திகதிகளில் கொழும்பிலிருந்து பயணிப்பதற்கான விமான பயணச்சீட்டுகளை கொண்டுள்ள பயணிகள் இலங்கையிலிருந்து அழைத்து வரப்படுவார்கள் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவர்களை கொண்டு வருவதற்கான விமானங்கள் கொழும்பிற்கு பயணிகள் இன்றி செல்லவுள்ளன எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

## நேற்று வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் இருந்து ஏ9 வீதியூடாக நொச்சிமோட்டை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டர் சைக்கிள் தாண்டிக்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, ஏ9 வீதியில் வவுனியா நோக்கி வந்த பாரவூர்தி சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியின் எதிர்ப்பக்கம் சென்று மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த சாந்த சோலை மகளிர் அமைப்புக்கு சொந்தமான கட்டடத்திற்குள் புகுந்தது.

இந்த விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் மரணமடைந்தார், மோட்டர் சைக்கிளில் பயணித்த மற்றுமொரு நபர் படுகாயமடைந்தார்.

விபத்தின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த சாந்தசோலை மகளிர் அமைப்புக்கு சொந்தமான கடை சேதமடைந்துள்ளது. சம்பவ இடத்தில் வாகனச் சாரதிக்கும் இளைஞர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது.

சம்பவ இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு விபத்துக்குள்ளான வாகனம் கொண்டு செல்லப்பட்டது. வாகன சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துக் குறித்து வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

## ஒரு இலட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1 முதல் 2 நபர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 5ஆயிரம் ரூபாவும், மூன்று நபர்களை கொண்ட குடும்பத்துக்கு 6,400 ரூபாவும், நான்குக்கும் மேற்பட்ட நபர்களை கொண்ட குடும்பங்களுக்கு 7,500 ரூபாவும் சமூர்த்திக் கொடுப்பனவுடன் வழங்கப்படவுள்ளது.

அதேநேரம் யாழ் மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் வயது முதிர்ந்தவர்கள் பட்டியலில் காணப்படும் நிலையில் அவர்களுக்கும் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ் மாவட்டத்தில் எரிவாயு விநியோகத்தை முறையாக மேற்கொள்வதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவிலே கிடைக்கப்பெறுகின்றது.

ஆகவே கிடைக்கப் பெறுகின்ற எரிவாயு சிலிண்டர்களை தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# 9 பேருடன் பயணித்த ஓட்டோ கோர விபத்து; இருவர் சாவு!

## ஐவர் படுகாயம்



ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் பலியாகியுள்ளனர். அத்துடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

தனமல்வில, சூரியாரா பகுதியில் நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஓட்டோவில் 9 பேர் பயணித்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

உடவலவையிலிருந்து தனமல்வில நோக்கிப் பயணித்த குறித்த ஓட்டோ, வீதியைவிட்டு விலகி மரத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# உணவுப் பஞ்சத்துக்குத் தீர்வுகாண பிரதமரால் விசேட வேலைத்திட்டம்



நாடு எதிர்கொள்ள நேரும் உணவு நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் விசேட திட்டமொன்றை அடுத்த மாதம் வெளியிடப்போகிறேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் உரம் மற்றும் எரிபொருள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆறுமாதங்களுக்குள் தற்போதைய உணவுப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் பிரதமர் இதன் போது குறிப்பிட்டார்.

பிரதமருடனான நேற்றைய சந்திப்பில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி விமலேந்திரன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதி மலின் ஹெர்விக் இருவரும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய உணவுப் பற்றாக்குறை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது மேற்படி பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்திய பிரதமர் விவசாயத் துறையானது தற்போது உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டையே எதிர்நோக்கியுள்ளது என்று குறிப்பிட்டார். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தன்னால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நகர் பிரதேச விவசாய வேலைத்திட்டம் தொடர்பில் பிரதமர் இதன்போது எடுத்துரைத்தார்.

உணவுப் பற்றாக்குறை அச்சுறுத்தலைக் கருத்தில்கொண்டு, வேளாண்மைத் துறை அதிகாரிகளால் உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொகுக்கப்பட்டு வருகின்றது எனப் பிரதமர் விளக்கினார். இந்தத் திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இந்த முயற்சிக்கு ஆதரவை வழங்கும் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சாத்தியமான உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு முன்னெடுக்கப்படும் நகர்ப்புற விவசாய உற்பத்தி முயற்சியையும் பிரதமர் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க விவசாய சமூகத்துக்கு உதவும் புதுமையான விவசாய உதவித் திட்டத்தைத் தொகுத்து வருகிறோம் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகள் இதன்போது விளக்கமளித்தனர்.

நன்கொடையாளர்கள் நாட்டுக்கு உதவ முன்வந்துள்ளனர் எனவும், நகர்ப்புற விவசாயத் திட்டம் மேலும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டால் அதிக நிதி உதவி வழங்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகளால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# பெண் துறவி விபத்தில் பலி

நேற்று நண்பகல் நல்லூர் கோவிலுக்கு முன்னால் பருத்தித்துறை வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் துறவியான ஓம்காரரூபி சண்முகநாதன் (வயது 70) அந்த இடத்திலேயே உயிரிழந்தார் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் நல்லூர் பிரதேச செயலக வீதிக்குத் திடீரென்று திரும்ப முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு, உயிரிழந்தார்.

# அஹங்கம சூட்டில் இளைஞர் மரணம்

அஹங்கம, பன்சாலிய பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவத்த இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

# ஓடையில் விழுந்து குழந்தை சாவு

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் ஒன்றரை வயது குழந்தை வீட்டுக்கு அருகில் இருந்த நீர்ப்பாசன ஓடையில் விழுந்து உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஓடையில் விழுந்த குழந்தை நீரோட்டத்தில் அள்ளுப்பட்டு சென்றதாகவும், 2 கிலோமீட்டருக்கு அப்பால் சடலமாக குழந்தை மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிசாந்தன் சபீசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

# 21 ஆவது திருத்தத்துக்குள்ள தடைகளை வென்றிட சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்

## நீதி அமைச்சர் விஜயதாஸ கோரிக்கை

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் உள்ள தடையை வெற்றிகொள்ள சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

புதிய அரசமைப்பு விரைவில் உருவாக்கப்படும் என நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜய தாஸ ராஜபக்ஷ முஸ்லிம் சிவில் அமைப்பின் பிரதிநிதி களிடம் தெரிவித்தார்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டமூல வரைவு தொடர்பில் முஸ்லிம் சிவில் மற்றும் அரசியல் கட்சி பிரதி நிகள் 4 யோசனைகளை அமைச்சரிடம் முன்வைத் தனர்.

உத்தேச அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டமூல வரைவு தொடர்பில் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத் தரணி விஜயதாஸவிற்கும், முஸ்லிம் சிவில் அமைப்புக் களின் பிரநிதிகளுக்கும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகளின் பிரநிதிகளுக்கும் இடை யிலான சந்திப்பு நீதியமைச்சில் இடம்பெற்றது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை செயற்படுத் துவதன் அவசியம் மற்றும் நாட்டின் தற்போதைய அர சியல் நிலைமையை நீதியமைச்சர் இதன்போது பிரதி நிதிகளிடம் எடுத்துரைத்தார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பிலான தனது யோசனைகளை சிவில் மற்றும் அரசியல் கட்சி களின் பிரதிநிதிகள் நீதியமைச்சரிடம் முன்வைத்தனர்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டத்தை நடை முறைப்படுத்துவதில் உள்ள தடைகளை நீக்கிக்கொள் வதற்கு மக்களின் ஆதரவு முக்கியமானதாகும் என்ப தால் சகல மக்களும் 21ஆவது திருத்தம் தொடர்பாக அவதானம் செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நீதியமைச்சர் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார்.

புதியஅரசமைப்புவெகுவிரைவில்உருவாக்கப்படும். அரசியல் ஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்தி பொருளா தாரத்தை மேம்படுத்துவதற்காக அரசியலமைப்பின் 21 ஆது திருத்தம் நிறைவாக நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டும்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரசசேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றின் சுயாதீனத் தன்மை மட் டுப்படுத்தப்பட்டதுடன், தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காளர் நாயகம் ஆணைக்குழு இரத்துச் செய்யப் பட்டன.

21 ஆவது திருத்தம் ஊடாக ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டு தேசிய பெறுகை மற் றும் கணக்காளர் நாயகம் ஆகிய ஆணைக்குழுக்கள் மீள ஸ்தாபிக்கப்படும் என நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சை மாத்திரம் ஜனாதிபதி வகித் தல், அமைச்சரவை நியமனத்தின் போது ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையைப் பெறல், பிரதமரை நீக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து நீக்கி அதனை நாடாளுமன்ற பெரும்பான்மைக்கு உட்படுத்தல், அரச மைப்பு பேரவை நடுநிலை வகித்தல் அதற்காக 5 நாடா ளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் பிரதிநிதிகள் 5 பேரை நியமிப்பது உள்ளிட்ட 4 யோசனைகளை முஸ் லிம் சிவில் அமைப்பினர் நீதியமைச்சரிடம் முன்வைத்த னர். இந்த யோசனைகளை அமைச்சரவையில் முன் வைப்பதாக நீதியமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள் ளார்.



## டயானா கமகே இன்னும் ஐக்கிய மக்கள் சக்தியில்!



அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதர வளிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு பொது ஜன பெர முன அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் டயானா கமகே, இன்னும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளராக பதவி வகிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளில் பெண் பிரதிநிதித்துவம் தொடர் பான அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் வெளியி டப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று கூறுகிறது.

கமகே, அரசாங்கத்தில் இணைந்ததை அடுத்து அவர், கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஏற்கனவே அறிவித் திருந்தனர்.

இந்தநிலையிலேயே புதிய தகவல் வெளியாகி யுள்ளது.

இதேவேளை தாமே, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உரிமையாளர் என்று டயானா கமகே கூறிவருகிறார்.

## கொழும்பு துறைமுகத்துக்கு உலக அரங்கில் பாராட்டு!

உலக வங்கி மற்றும் சர்வதேச சந்தை புலனாய்வு மற்றும் நிதி சேவை ஆகியவற்றின் வருடாந்த அறிக்கை யில் இலங்கை கொழும்பு துறைமுகம் தெற்காசியா மற் றும் இந்திய உப கண்டத்தில் மிக சுறுசுறுப்பாக இயங் கும் துறைமுகம் என தரப்படுத்தப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு தொடர்பான இரண்டாவது பதிப் பிலேயே இவ்வாறு கொழும்பு துறைமுகம் இடம்பிடித் துள்ளது.

இதற்கமைய, கொழும்பு துறைமுகம் இந்திய பெருங் கடல் எல்லைக்குள் இருக்கும் துறைமுகங்களில் மூன் றாவது இடத்திலும், உலகில் உள்ள 370 துறைமுகங்க ளில் 22 ஆவது இடத்திலும் இலங்கை, கொழும்பு துறைமுகம் தரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகம் உலகில் பெறுமதியான கேந் திரமையத்தில்இருந்தாலும்பல்வேறுதுறைமுகங்களின் செயல் திறனை ஒப்பிடும் போது நம்பகமான, நிலை யான மற்றும் ஒப்பிடக் கூடிய அடிப்படைகள் இல்லாததே துறைமுகத்தின் முன்னேற்றத்தில் எதிர்நோக்கப்படும் முக்கிய சவால் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## பன்னிப்பிடிய 'வியன்புர' பகுதியில் எம்.பிக்களுக்கு வீட்டுத் திட்டம்!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல கட்டடத்தொகுதிக்குப் பதிலாக பன்னிப்பிடிய 'வியன்புர' வீட்டுத்தொகுதியில் வீடுகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய பன்னிபிடிய வியன்புரவ வீடமைப்பு செயற்திட்டத்தின் பி கட்டடத்தில் 101 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்குமிட வச திக்காக மாதிவெல பகுதியில் 1994ஆம் ஆண்டு கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. இந்த வீட்டுத்தொகுதி தற்போது பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

மாதிவெல கட்டடத்தொகுதி அமையப் பெற்றுள்ள நிலப்பரப்பை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்க மாறு ஜனாதிபதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய இந்த வீடுகளுக்கு பதிலாக வேறு இடத்தில் புதிய இடத்தில் வீடுகளை வழங்குவது தொடர் பில் 2021.06.23ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவு குழு கூட்டத்தின் போது யோசனை முன்வைக்கப்பட் டது.

2018ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை யால் முன்விற்பனை என்ற அடிப்படையில் பன்னிபிடிய பகுதியில் 500 வீடுகளை உள்ளடக்கிய வீட்டுத்தொகுதி யையும், வியன்புர மத்திய தரப்பு வீட்டு செயற்திட்டம் பி கட்டடத்தில் ஒரு வீடு அடிப்படையில் 101 நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங் களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு வீட்டின் பெறு மதி ஒரு கோடியே 42 லட்சம் ரூபா தொடக்கம் ஒரு கோடியே 98 லட்சம் ரூபா வலை என அப்போது மதிப் பிடப்பட்டது.

2022.05.09ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களைத் தொடர்ந்து வீடுகளை இழந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்கா லிக அடிப்படையில் வழங்குமாறு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ வீடமைப்பு அதிகார சபைக்கு ஆலோ சனை வழங்கியுள்ளார்.

புன்ன பன்னிபிடிய, வியன்புர வீடமைப்பு செயற் திட்டத்தின் பி கட்டடத்தொகுதியில் உள்ள வீடுகளை 101 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கல் மற்றும் அதன் கட்டமைப்பு நாடாளுமன்ற செயலாளருக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

வியன்புர வீடமைப்பு செயற்திட்டத்தின் 101 வீடு கள் நிர்மாணிப்பிற்கான மொத்த செலவிற்காக மதிப் பிடப்பட்ட 1,795.34 மில்லியன் நிதியை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் அதில் 50 சத வீதத்தை ஒப்பந்த அடிப்படையில் செலுத்த 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மத்திய திறைசேரி யால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக் கிழமை காலை கொடியேற்றுதுடன் ஆரம்பமாகியுள்ளது.

கொடியேற்றத்தை அடுத்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தினந்தோறும் மாலை 6 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கான நவ நாள் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இதையடுத்து எதிர்வரும் 12 திகதி இரவு 7 மணிக்கு கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்ட கையின் தலைமையில் வெஸ்பர் ஆராதனை ஒப்புக் கொடுக்கப்படும்.

கொச்சிக்கடை புனித அந்தோனியாரின் திருவிழா திருப்பலிகள் திருவிழா தினமான இம்மாதம் 13 ஆம் தி கதியன்று அதிகாலை 4 மணிக்கு தமிழ் மொழியிலும், 5 மணிக்கும் சிங்கள மொழியிலும், 6 மணிக்கு ஆங் கில மொழியிலும் ஒப்புக்கொடுக்கப்படும்.

திருவிழா பாடல் திருப்பலிகள் அன்றைய தினம் காலை 8 மணிக்கு தமிழ் மொழியிலும், காலை 10 மணிக்கு சிங்கள மொழியிலும், நண்பகல் 12 மணிக்கு ஆங்கில மொழியிலும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெற்று, இரவு 8 மணியளவில் நற்கருணை ஆசீர் வாதமும் புனித அந்தோனியாரின் ஆசீர்வாதமும் வழங்கப்படும்.

ஈஸ்டர் தாக்குதல் - கொரோனா பெருந்தொற்று போன்ற காரணங்களால் கடந்த 3 ஆண்டுகளாக நடத் தப்படாமல் இருந்து வந்த கொச்சிக்கடை புனித அந் தோனியாரின் திருச்சொரூப பவனி இம்முறை நடத்தப் படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2022இல் வெளியிடப்பெற்றது